897

THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

"வக்கீல்"

897
—
157.

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

இந்த இதழில்

சென்னை விருந்துக் கட்டுப்பாடு உத்தரவு.

விற்பனை வரிச் சலுகை

ஷாப் சட்ட விதிவிலக்குகள்

சைக்கிள் டயர் ட்யூப் - விலை நிர்ணயம்

விவசாயி கொடுக்கும் அதிக வட்டி

பினாமி சாசனங்கள்

கோட்டைக்குப்பம் கொலைவழக்கு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAR 1951
MADRAS

THE "VAKIL" — மார்ச்சு-1951 — 4 அணா

அடுத்துவரும் இதழ்களில்

கிராம பஞ்சாயத்துச் சட்ட மாறுதல் விதிகள்.

புதிய கிராம பஞ்சாயத்துச் சட்டம் சென்னை ராஜ்யம் முழுவதிலும் 1-4-1951ல் அமுலுக்கு வருகின்றதே! பழைய பஞ்சாயத்து போர்டுகள் என்ன ஆகும்? புதுச் சட்டப்படிக்கான பஞ்சாயத்துக்கள் எவ்விதம் 1-4-1951 ஒரே தினத்தில் அமைக்கப்படும்? அவைகளின் அங்கத்தினர்கள் யார் யார்? பழைய பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் 1-4-1951ல் என்ன ஆகும்? கிராமபெரிய தனக்காரர் பழைய பஞ்சாயத்தின் அங்கத்தினராக இருந்தால் அவர் நிலைமை என்ன? இவைகளுக்கும் இது போல் உள்ள பல கேள்விகளுக்கும், அடுத்த "வக்கீல்" இதழில் "கிராம பஞ்சாயத்துச் சட்ட மாறுதல் விதிகள்" என்ற தலைப்பின் கீழ் விளக்கப்படும் விஷயங்களிலிருந்து நீங்கள் பதில் தெரிந்து கொள்ளலாம்.

★ ★ ★

விவாக ரத்து விதிகள்.

விவாக ரத்து மனுவில் என்ன விவரங்கள் காண்பிக்கப்படவேண்டும்? விவாக ரத்து செய்த பின் மாஜி மனைவிக்குப் புருஷனிடமிருந்து ஜீவனாம்சம் கிடைக்குமா? அதற்கு சொத்து ஜவாப்தாரியாக டிக்ரி செய்யலாமா? ஒரு தடவை ஜீவனாம்சத் தொகையை நிர்ணயித்த பிறகு, விவாக ரத்து செய்து கொண்ட கணவனோ, மனைவியோ அத்தொகையைக் குறைக்கவோ, அதிகரிக்கவோ ரத்துசெய்யவோ மனுப்போடலாமா? அப்பீல் உண்டா? விவாக ரத்து மனுவை நீதிபதி பகிரங்க கோர்ட்டில் விசாரிக்காமல் தனி அறையில் விசாரிக்க முடியுமா? மனைவி இறந்துபோய் விட்டாள் என்று உண்மையாக நம்பி, கணவன் மறுமணம் செய்து கொண்டால் என்ன சட்டம்? இவைகளுக்குப் பதில்—இப்பொழுது சென்னை சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பலதாரத் தடை-விவாக ரத்துச்சட்ட விதிகளில் இருக்கின்றன. இவ்விதிகளை நேயர்கள் அடுத்த "வக்கீல்" இதழில் விவரமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

விஜயா ஔஷத சாலை
1, சக்கரபாணிகோயில் வடக்குவீதி, கும்பகோணம்.

[நாட்பட்ட நோய்களுக்கும், கடுமையான நோய்களுக்கும், முக்கியமாக குஷ்டம், வெள்ளை குஷ்டம், க்ஷயரோகம், சுவாசகாசம், நீரிழிவு, தாது பலஹீனம், கக்குவான் இருமல், மூலம் முதலிய ரோகங்களுக்குக் கைகண்ட சிகிச்சை செய்யப்படும்.]

1. பூர்ண சந்திரோதய மகரத்வஜம்
க்ஷயம், தாதுபலஹீனம் முதலிய எல்லா வியாதிகளுக்கும் ஒப்பற்றது.
ஒரு வராகனிடை ரூ. 30-0-0

2. விஜயா காயகல்பம்
சிறந்த யௌவனமளிக்கும் டானிக் உணவு. 15 நாள் உபயோகம்.
1 பௌண்டு பாட்டில் ரூ. 4-0-0

3. ஜீவாக்னிரஸம்
ஜலதோஷம், ஜுரம், ஜன்னி, வாயு முதலியவைகளுக்குச் சிறந்தது.
20 மாத்திரை பாட்டில் 1க்கு ரூ. 1-0-0

4. கக்குவான் மருந்து
கக்குவானுக்கும் இருமலுக்கும் கைகண்ட மருந்து. 1 தோலா ரூ. 1-0-0

5. விஜயா ஆயிண்டுமெண்டு
அக்கி, கரப்பான், சொறி, சிரங்கு, புண், புரை, காயம் முதலியவைகளுக்கு சிறந்தது. பாட்டில் 1க்கு ரூ. 0-12-0

6. சவனப்ராசம்
7. வில்வாதி லேகியம்
1 சேர் டின் ரூ. 3-8-0
½ சேர் டின் ரூ 1-12-0

8. அஸ்வகந்தி ரஸாயனம்
9. ஸௌபாக்ய சுண்டி
1 சேர் டின் ரூ. 3-0-0
½ சேர் டின் ரூ. 1-8-0

10. தாமரைத் தைலம்
11. குமரித் தைலம்
12. கருஞ்செம்பைத்தைலம்
13. ப்ருங்காமாலக தைலம்
5 oz. பாட்டில் ரூ. 1-8-0

14. க்ஷீரபலாத் தைலம்
2 oz. பாட்டில் ரூ. 1-2-0

தவிர சிந்தூரங்கள், பஸ்பங்கள், லேகியங்கள், தைலங்கள், க்ருதங்கள் முதலியவை சிறந்த ஆயுர்வேத முறைப்படி தயார்செய்து சரஸமான விலைக்குக் கொடுக்கப்படும்.

ஏஜண்டுகள் தேவை

ஆயுர்வேத ரத்னம்
R. ராமானுஜாச்சாரியார்.
Regd. Medical Practitioner,
(Indian System)

“வக்கீல்”

பொதுமக்களுக்கான உயர்தர மாத
சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர் B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி B.A., B.L., (ஆசிரியர்)

1-3-51 முதல் “வக்கீல்” சந்தா விபரம்

வருட சந்தா அதாவது 12 இதழ்களுக்கு மட்டில்	ரூ. 3—0—0
விஷேச வருட சந்தா (12 இதழ்களுக்கும் அவைகளுக்கிடையே வெளியிடப்படும் “வக்கீல்” பிரசுரங்களுக்குமாக)	ரூ. 6—0—0
ஷை வெளிநாடு	ரூ. 10—0—0

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் மட்டில் அனுப்பப்படும். விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 “வக்கீல்” மாத இதழ்களும் அவைகளுக்கிடையே வெளியிடப்படும் “வக்கீல்” பிரசுரங்கள் என்ற புத்தகங்களும் அனுப்பப்படும். ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. சாதாரணமாய் வி. பி. பி. கிடையாது.

2. சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர், “வக்கீல்” காரியாலயம்
தபால் பெட்டி 26 : கும்பகோணம்
(தென் இந்தியா)

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

3. மணியார்டர் கூப்பனில் புரியும்படி ஒவ்வொரு எழுத்தாக—பெயர்; விலாசம்; தபாலாபீஸ்; ஜில்லா—இவைகளை எழுதவும்.

4. சிலோன் நேயர்கள் வி. பி. பி. மூலம் அனுப்பும்படி எழுதி ரூ. 6—7—0 செலுத்தி விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

5. வெளிநாட்டிலிருந்து சந்தா தொகையை பிரிட்டிஷ்போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம்.

“வக்கீல்”

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 3 மார்ச்சு 1951 இதழ் 3

பொருள் அடக்கம்

	பக்கம்
குறிப்புகளும்-செய்திகளும்	3
புதிய சட்டங்கள்	4
சென்னை விருந்துக் கட்டுப்பாடு உத்தரவு	5
வரிகள்	6
கண்ட்ரோல் - லைசென்சு - ரேஷன்	
விலை நிர்ணயம் — இதர சர்க்கார் அறிக்கைகள்.	7
வழக்கும்-தீர்ப்பும்	
*விவசாயி அதிக வட்டி கொடுத்தால்	9
*குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் நிலத்தைக் கிரயம் வாங்குபவரின் பாத்தியம்	10
*பெயர் இரவல் அல்லது ‘பினாமி’ சாசனங்கள்	11
கேள்வி-பதில்	14
கோட்டைக் குப்பம் கொலைவழக்கு	18

ஜாதகம்! ★ ஆருடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த ஜில்லா, தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை.

ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விபரம்: 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 3. ஒரு தசாவிற்கு புக்திவாரியாக பலன் எழுத ரூ. 12.

குறிப்பு: வெளிநாட்டுக்கு இரட்டிப்பு கட்டணம்.

Lt. Col. M. N. C ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—

தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர்: வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ

தெப்பக்குளம் P. O., திருச்சி.

"எலிக்ஸிர் அஸ்வகந்தா"

மகரிஷிகள் ஆயுர்வேத உதவியால் ஆயுள் பலம், தேக புஷ்டி, ஆரோக்யம், யௌவனம் இவைகளை அனுபவித்து உதவி அருளிய சிறந்த ரத்த விருத்தி லேகியம் இதுவே. தொடர்ந்து உட்கொள்ள மலபந்தம் நீங்கி வயிறு, முதுகு, இடுப்பு வலிகள் ஒழித்து நல்ல பசியையும், நித்திரையையும் உண்டுபண்ணும். இல்லற வாழ்க்கையில் இணையில்லா இன்பமளிக்கும். தவிர இரத்த மூலம், குடல் வாய்வு, குடல் இறக்கம இவைகளைக் குணப்படுத்தும். வயோதிகரை வாலிபர் என எண்ணச் செய்யும் ஔஷதம் எமது "எலிக்ஸிர் அஸ்வகந்தா"வே.

40 தோலா கொண்ட டின் ரூ. 10

தபால் செலவு பிரத்யேகம்

ஆயுர்வேத வைத்தியர்

T. V. ஜெயராம சாஸ்திரிகள்,

வீரராகவ வைத்திய சாலா,

ஸ்ரீரங்கம் P. O., S. I.

"சக்தி ஆருடம்"!

ஸ்ரீ K. R. அப்ளாச்சாரியார் M.A.L.T. வைஸ் பிரின்சிபால், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, 27-6-50ல் எழுதுகிறார்.

"தங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

1 to 3 ஆருட கேள்விகளுக்கு ரூ. 1.

3-க்கு மேல் கேள்வி 1க்கு அணா 8.

1 வருட பலன் ரூ. 5.

ஜாதகம் கணிக்க ரூ. 2.

சக்தி கவசம் ரூ. 7—8—0.

வி. பி பி தனி,

ஜாதகம் OR எழுதும் நேரம் தேவை.

N. B:—வெளி நாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணமாய் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம் PO (S. I.)

மாடர்ன் ரேடியோஸ்

பெரியதெரு, :: கும்பகோணம்.

எங்களிடம் ஓரியண்ட் சீலிங் & டேபிள் பேன் கிடைக்கும். மலிவான விலையுள்ளது, நீடித்த உழைப்பு, கோடை காலத்திற்கு மிகவும் சிறந்தது. 2 வருஷ கியாரண்டியுள்ளது. கைவசம் ரெடி ஸ்டாக்.

பிலிப்ஸ் ரேடியோ

ஸெட்டுகளுக்கு தஞ்சை ஜில்லாவிற்கு அதிகாரம் பெற்ற விற்பனை உரிமையாளர்.

187705

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 3 | மார்ச்சு 1951 | இதழ் 3

குறிப்புகளும் - செய்திகளும்

நீதி நிர்வாகப் பிரிவினை :— கோயமுத்தூர், நீலகிரி, சேலம், நெல்லூர் ஜில்லாக்களில் 1-5-1951 முதல் நீதி-நிர்வாகப் பிரிவினைத் திட்டம் அமுலுக்கு வரும்.

புதிய கிராம பஞ்சாயத்துச் சட்டம் 1—4—1951 முதல் அமுல்:— 1950 ஆகஸ்ட் மாதம் இயற்றப்பட்ட சென்னை கிராம பஞ்சாயத்துச் சட்டம் சென்னை ராஜ்யம் எங்கும் 1—4—1951-ல் அமுலுக்கு வருமென்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். இச் சட்டம் சம்பந்தமான பல முக்கிய விஷயங்கள் அடுத்த "வக்கீல்" இதழில் விளக்கப்படும்.

வனஸ்பதி உற்பத்தித் தடை:— சென்ற மாதம் அகமதாபாத்தில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி வனஸ்பதி உற்பத்தியை இந்திய சர்க்கார் தடை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது. வனஸ்பதி உற்பத்தியையும் இறக்குமதியையும் தடை செய்யவேண்டுமென்று இந்திய பார்லிமெண்டில் ஒரு மசோதாவும் வந்திருக்கிறது. வனஸ்பதி கண்ட்ரோலர் என்ற அதிகாரியும் வனஸ்பதி உற்பத்தி, விற்பனை சம்பந்தமாய் தினுசு தினுசான நிபந்தனைகள் அடங்கிய உத்தரவுகளைப் போட்டுக்கொண்டே இருக்கின்றார். வனஸ்பதியை உற்பத்தி செய்யும் கோடீசுவரர்களும், ஒன்று சேர்ந்து இந்திய மக்களுக்கு வனஸ்பதியின் குணாதிசயங்களை விளம்பரங்கள் மூலம் ஏராளச் செலவில் எடுத்துக் காட்டிக்கொண்டே இருக்கின்றனர். இச்செய்திகளுக் கிடையே பொதுமக்கள் உண்மை 'நெய்' என்று வனஸ்பதியையும் கொழுப்பையும் அதிக விலை கொடுத்து வாங்கிக்கொண்டே இருக்கின்றனர்!

ஷாப் சட்டம்:— "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தலைப்பில் ஷாப் சட்டம் என்ற புத்தகம் இன்று பிரசுரம் செய்திருக்கிறோம். ஷாப் சட்டத்தின் செக்ஷன்கள், விதிகள், விதி விலக்குகள், நமூனாக்கள் முதலிய எல்லாவற்றையும் விஷய வாரியாகத் தொகுத்து எழுதப் பட்டுள்ளது. மற்ற கட்டுப்பாடு சட்டங்களைப் போல் ஷாப் சட்டம் தாற்காலிகமான ஓர் சட்ட மன்று. வருங்காலத்தில் ஷாப் சட்டம் இன்னும் விஸ்தரிக்கப்படுமே ஒழிய, மறையாது. சர்க்காரால் விதி விலக்குகள் அளிக்கப்பட்டு வந்தாலும், ஷாப் சட்டத்தின் அடிப்படையான முக்கிய விதிகளை அனைவரும் நன்கு தெரிந்துகொள்ளும் பொருட்டே, சட்ட நுணுக்கங்கள் எல்லாம் இப்புத்தகத்தில் மிக எளிய தமிழ் நடையிலேயே விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கடைக்கும் ஹோட்டல் முதலிய மற்ற ஸ்தாபனங்களுக்கும் அவைகளில் வேலையில் அமர்ந்திருக்கும் சிப்பந்திகளுக்கும் இப் புத்தகம் ஓர் நண்பனும் துணைவனுமாகும். இப்புத்தகத்தின் விலை ரூ. 1-8-0 தான். தபால் சார்ஜ் பிரத்தியேகம். "வக்கீல்" விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேர்ந்திருப்பவர்களுக்கு, தனிக் கட்டணம் கிடையாது. அவர்களுக்கு இப் புத்தகம் நேராக தபால் மூலம் இம்மாதம் அனுப்பப்படும்.

புதிய சட்டங்கள்

சுருக்கியும்-வரிசையாகவும்

1950 ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டவை. பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கும் தேதி அச்சட்டம் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன.]

33 ஆவது (சென்னை) சட்டம்

(26-12-1950) சர்க்கார் உதவிபெறும் ஸ்தாபனங்களின் சொத்தை மாற்றுவது பற்றிய சட்டத் திருத்தம். Madras Aided Institutions Prohibition of Transfers of Property Amendment Act, 1950. சர்க்கார் உதவியைக் கொண்டு காலேஜ், அல்லது பள்ளிக்கூடத்திற்காகவோ, வைத்திய சாலைக்காகவோ வேறு எந்த ஸ்தாபனத்திற்கோ நிலம் வாங்கப்பட்டிருந்தாலும், கட்டிடம் கட்டப்பட்டிருந்தாலும், அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தாலும் அச்சொத்தைச் சர்க்கார் அனுமதியின்றி அதன் நிர்வாகி எவ்வித கிரயம், பரிவர்த்தனை, அடமானம், குத்தகையும் ஏற்படுத்தக்கூடாதென்று இருக்கும் 1948 ஆம் வருடத்திய 14 ஆவது சட்டத்தில் புதிதாக அடியில் கண்டபடி சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது அவ்வித சொத்தை ஜாமீனும் வைக்கக் கூடாதென்றும், சர்க்கார் அனுமதியின்றி எவரும் அவ்வித சொத்தைக் கோர்ட் மூலம் ஜப்தி செய்யவும், எலம் போடவும், கோர்ட் ஜாமீனுக்குட்படுத்தவும் கூடாதென்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு மாறாக ஏற்படும் ஜப்தி கோர்ட் எலம் முதலியவை செல்லாவென்று சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

34 ஆவது (சென்னை) சட்டம்

(2-1-1951) Code of Civil Procedure, Madras Amendment Act, 1950. சிவில் வழக்கு முறைச் சட்டத் திருத்தம். எந்த எந்த சாமான்களை ஜப்தி செய்யக் கூடாதென்று விவரிக்கும் 60 ஆவது செக்ஷனில் கண்ட ஜாப்தாவில் ஒரு ஸ்தல ஸ்தாபனத்திலிருந்து ஒருவர் வாங்கும் பென்ஷன் தொகையையும் கிராட்யூடித் தொகையையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இத்தொகைகளை இனி ஜப்தி செய்ய முடியாது.

35 ஆவது (சென்னை) சட்டம்

(9-1-1951) சென்னை சிடி போலீஸ் சட்டமும், சூதாட்டத் தடைச் சட்டமும் திருத்தப் பட்டிருக்கிறது. Madras City Police and Gaming Amendment Act, 1950) சூதாட்ட வழக்குகளில் விதிக்கப்படும் அபராதத் தொகைகளிலும், சூதாட்டம் நடக்கும்போது கைப்பற்றப்பட்டுச் சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப்படும் தொகைகளிலும் ஒரு பகுதியை, அச்சூதாட்டத்தைப் பற்றித் தெரிவித்தவர்களுக்கும் கண்டுபிடித்த போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் பரிசாகக் கொடுக்கும்படி மாஜிஸ்ட்ரேட் உத்தரவிடலாம். அப்படியானல் அத்தொகையைப் போலீஸ் கமிஷனருக்கோ, ஜில்லா போலீஸ் தலைமை அதிகாரிக்கோ மாஜிஸ்ட்ரேட் அனுப்பிவிடவேண்டும். இப்போலீஸ் அதிகாரி அத்தொகைகளை விநியோகம் செய்வார்.

36 ஆவது (சென்னை) சட்டம்

(23—1—1951) பரம்பரை கிராம உத்தியோகச் சட்டத்திருத்தம் (Madras Hereditary Village offices—Amendment Act-1950) ஒரு பரம்பரை கிராமத் தொழிலாளருக்காக) Hereditary offices of Village Artizans) விடப்பட்டிருக்கும் மான்யம் என்பது நிலத்தையே குறிக்குமா, அல்லது அந்நிலத்திற்கான சர்க்கார் வரியை மட்டில் குறிக்குமா என்று கலெக்டர் தீர்மானம் செய்ய வேண்டியதாக இருந்தால், 14—7—1942 லோ பிறகோ எப்பொழுதாவது அந்நிலம் அப்பரம்பரைத் தொழிலாளரிடமே இருந்தால், அவருக்கு மான்யமாக விடப்பட்டது நிலம்தான் என்று வைத்துக் கொண்டு கலெக்டர் அவ்வழக்கைத் தீர்மானம் செய்ய வேண்டுமென்று அச்சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

சென்னை - விருந்துக் கட்டுப்பாடு உத்தரவு (1951)

(Madras Guest Control Order - 1951)

1946-ஆம் வருடத்திய அத்தியாவசியப் பொருள் சப்ளை — தற்காலிக மத்திய சட்டத்தின் கீழ், சென்னை சர்க்கார் 9-2-1951-ல் இந்தக் கட்டுப்பாடு உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றனர். இந்த உத்தரவு கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதியாகிய 13-2-1951 முதல் சென்னை ராஜ்யம் முழுவதிலும் அமுலுக்கு வந்துவிட்டது. ரேஷன் அமுலில் இருக்கும் இடங்களிலும் சரி, ரேஷன் அமுலில் இல்லாத இடங்களிலும் சரி, எல்லா இடங்களிலும் இந்தக் கட்டுப்பாடு உத்தரவு அமுலில் இருக்கும்.

விருந்து:—இக்கட்டுப்பாடு உத்தரவில் விருந்துகள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. (1) திருமண (கலியாண) விருந்துகள் (2) ஈமச்சடங்கு விருந்துகள் (3) இவை இரண்டுமல்லாத மற்ற விருந்துகள். இவை ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறான விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இக்கட்டுப்பாடு உத்தரவுப்படி (1) திருமணங்களில் எவரும் இரண்டு வேளைகளுக்கு மேல் விருந்து செய்யக்கூடாது. 'திருமண விருந்து' என்பது திருமணம் நடக்கும் தினத்தன்று நடக்கும் விருந்துக்குத்தான் பொருந்தும். கலியாண சம்பந்தமாய் மற்றத் தினங்களில் செய்யப்படும் விருந்துகள் 'திருமண விருந்து' ஆகா. இவ்விதம் திருமணதினத்தன்றுமட்டில் அளிக்கக்கூடிய இரண்டு வேளை விருந்துகளிலும் வேளை ஒன்றுக்கு 50-நபர்களுக்குமேல் உணவு அளிக்கக்கூடாது. (2) ஈமச்சடங்கு விருந்து - என்பது ஒருவர் இறந்த பிறகு, ஏதாவது ஒரு தினத்தில் சாத்திரப்படிக்கோ, வழக்கப்படிக்கோ அளிக்கப்படவேண்டிய விருந்தைத்தான் குறிக்கும். இவ்விதம் அளிக்கப்படும் விருந்தும் ஏதாவது ஒரு தினத்தில் ஒரு வேளைதான் போடலாம். எந்த ஈமச்சடங்கு விருந்திலும் 50-நபர்களுக்கு மேல் உணவு அளிக்கக்கூடாது. (3) இவை இரண்டுமல்லாத மற்ற எந்த விதமான விருந்துகளிலும் 24-நபர்களுக்குமேல் உணவு அளிக்கக்கூடாது.

விருந்தினர்களின் எண்ணிக்கையைக் கணக்குச் செய்வதில், விருந்தளிப்பவரையும் அவருடன் இருக்கும் குடும்பத்தினரையும் சேர்த்துக் கொள்ள வேண்டியதில்லை. மேலும் திருமணம் முதலிய சமயங்களில் திருமணப் பணியாரம் (Wedding Cakes) அல்லது தித்திப்பு பட்சணங்களை (Sweets) அனுப்புவதையும் இக்கட்டுப்பாடு உத்தரவு பாதிக்காது. ஆனல் அவைகளில் உபயோகப்படுத்தப்படும் ரேஷன் தானியங்கள் 50-நபர்களுக்கு விருந்து செய்தால் எவ்வளவு வேண்டுமோ, அதற்கு மேற்படக் கூடாது.

விதி விலக்குகள்:—(1) ஒரு சங்கத்தின் அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து, ஒவ்வொருவரும் சந்தா சேர்த்துத் தங்களுக்குத் தாங்களே அளித்துக்கொள்ளும் விருந்துகளில் (Subscription dinners or parties held by bonafide members of clubs and associations) எவ்வளவு அங்கத்தினர்கள் வேண்டுமானாலும் சேர்ந்து உணவு அருந்தலாம்; ஆனல் அவ்விருந்துகளிலும், அங்கத்தினரல்லாத விருந்தினர்கள் (guests) 24-நபர்களுக்கு மேல் இருக்கக்கூடாது. (2) ஸ்கூல் அல்லது காலேஜுகளில் மாணவர்களுக்கு நடத்தப்படும் கல்வி சம்பந்தமான பிரயாணங்களுக்கும் (Educational Tours) இந்தக் கட்டுப்பாடு உத்தரவு கிடையாது. (3) அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களால் நடத்தப்படும் மகாநாடுகளில் கூடும் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்படும் சாப்பாடுகளுக்கும் இந்தக் கட்டுப்பாடு உத்தரவு கிடையாது.

விருந்து அளிப்பவர்கள், முன் கூட்டியே அதிகாரிக்குத் தெரியப் படுத்தவேண்டும்.

இருபது நபர்களுக்கு மேற்பட்டவர்களுக்கு விருந்தளிப்பவர்களும் அல்லது விருந்துப் பண்டங்களை செய்து கொடுக்க ஒப்புக்கொண்ட ஹோட்டல்காரர்கள் முதலியவர்களும் (caterers) விருந்து நடப்பதற்கு முன் கூட்டியே கீழ்க்கண்ட விவரங்களைக் கண்டு அந்த இடத்திற்கான ரேஷனிங் ஆபீசருக்கோ, தாலூகா சப்ளை ஆபீசருக்கோ எழுத்து மூலம்

தெரிவிக்கவேண்டும். தெரிவிக்க வேண்டிய விவரங்கள் :—(1) எத்தனை நபர்களுக்கு உணவு அளிக்க உத்தேசம், (2) விருந்தில் கொடுக்கப் படும் உணவின் விவரம் (Menu), (3) விருந்து நடக்கும் இடம், (4) எந்தத் தேதியில் விருந்து நடத்தப்படும் — என்ற விவரங்களைக் கண்டு எழுதவேண்டும்.

விருந்து அருந்துவோரும் குற்றவாளியாவார்.

மேற்கண்டபடி தடுக்கப்பட்டிருக்கும் விருந்து களுக்காக 'உணவு' கொடுப்பவரும், உணவுக் கொடுக்க அனுமதிப்பவரும், விருந்தாளியாக உணவு அருந்துவோரும் குற்றம் செய்பவர்களா வார்கள்.

[குறிப்பு:— 1946-ஆம் வருடத்திய 24-ஆவது (மத்திய) சட்டப்படி (அத்தியா வசியப் பொருள் சப்ளை தற்காலிக சட்டப்படி) உணவு சம்பந்தமான கண்ட்ரோல் உத்தரவுகளை மீறினல் 3 வருடம் வரை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம். அபராதம் மட்டில் போதுமென்று மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தோன்றினல், அதன் காரணங்களைத் தீர்ப்பில் எழுதி, அபராதம் மட்டில் விதிக்கலாம்.]

உணவு :—'உணவு' என்பதில் கீழ்க்கண்டவை சேரா. அதாவது:—பானங்கள், வாதாம் பருப்பு, முந்திரிப் பருப்பு வகைகள் (Nuts), பழங்கள், உருளைக்கிழங்கு வறுவல் (Potato-chips), நவதானியத்தால் செய்யப்பட்டவை, சக்கரவள்ளிக்கிழங்கு, வாழைக்காய், மரவள்ளி, நிலக்கடலை மாவு, வெல்லம், சர்க்கரை, உப்பு, நெய், எண்ணெய், தாவர எண்ணெய், வெற்றிலைப் பாக்கு இவைகள் சேராது. ஆனல் இவைகளுடன் கோதுமை, அரிசி, சோளம், பார்லி, ராகி, மக்காச்சோளம் முதலிய கட்டுப் படுத்தப்பட்ட தானியங்கள் எதுவும் சேர்க்கப் பட்டிருக்கக்கூடாது.

எவ்வித விதி விலக்குகள் அளிக்கவும் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. இக்கட்டுப்பாடு உத்தரவை மீறிக் குற்றம் செய்பவர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடர ஜில்லா கலெக்டரின் முன் கூட்டியே அனுமதிவேண்டும்.

வரிகள்

விற்பனை வரி, கைத்தறி ஜவுளி வியாபாரிகளுக்குச் சலுகை: சென்னைப் பொது விற்பனை வரிச்சட்டத்தின் செக்ஷன் 6 (1)-ல் கண்ட அதிகாரங்களை உபயோகித்து, சென்னை சர்க்கார் கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பித் திருக்கின்றனர். சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லாக் கைத்தறி ஜவுளி வியாபாரிகளும் 15—2—1951 முதல் கைத்தறி ஜவுளி வியாபாரத் தொகையில் ரூபாய் 1க்கு ஒன்னரை தம்படி வீதம் விற்பனை வரி கொடுக்க வேண்டுமென்று உத்தர விடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே ரூபாய் 1க்குக் காலணவாக இருந்த வரி இவர்களுக்குப் பாதியாக்கப்பட்டிருக்கிறது.

(13—2—1951 சென்னை-சர்க்கார்-கெஜட் பாகம் I - பக்கம் 267)

"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"
1 மண்டலம் (48 நாள்)
பூஜை செய்தும்
ஆயுள் பூராவும் பலன் தரும்
வெள்ளி ரக்ஷை
ரூ. 43—12—0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்ய வும். ஷை தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செல விற்குமாக தேவை. மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N.B. (1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிர ஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர் கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) *V. P.* கிடையாது. (4) அதர்மர் களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறர்கள்.

கோட்டமருதூர்,
ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்
அரகண்டநல்லூர் *P. O. (S. A. Dt.)*

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
இதர சர்க்கார் அறிக்கைகள்

லைசென்சு கட்டணம்

சென்னை எரு வியாபாரிகள் லைசென்சு உத்தரவு (1949) திருத்தம்: சென்னை எரு வியாபாரிகள் லைசென்சு உத்தரவின்படி எரு வியாபாரம் செய்பவர்கள் ஒவ்வொரு வருடமும் ரூபாய் 10 கட்டி லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டுமென்று இருந்தது. இப்பொழுது இந்த ஷரத்து திருத்தப்பட்டு, கீழ்க்கண்டபடி லைசென்சு கட்டணங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

முதல் தடவை லைசென்சு வாங்கவும், பிறகு அதைப் புதுப்பித்துக் கொள்ளவும். (1) எண்ணெய் மில் வைத்திருப்பவர்கள் (Oil Millers) ஒவ்வொரு எக்ஸ்பெல்லருக்கும் (expeller) ரூபாய் 100 வீதமும்; ஒவ்வொரு ரோடரி அல்லது ஸ்க்ரூ பிரஸ்ஸுக்கு (Rotary or Screw press) ரூபாய் 20 வீதமும். (2) எரு வியாபாரிகள் ஒரு லைசென்சுக்கு ரூபாய் 20 வீதமும். (3) எருக்கலவை செய்யும் பெரிய வியாபார ஸ்தாபனங்கள் ரூபாய் 100 வீதமும் (இவர்கள் வியாபாரத்தில் புகுத்தும் ஒவ்வொரு வகை எருக் கலப்புக்கும் ஒருதடவை மட்டில் ரூ. 50 சேர்த்தும்) லைசென்சு கட்டணம் கட்ட வேண்டும். மில் வைத்திருப்பதற்கோ, கலவை செய்வதற்கோ லைசென்சு பெற்றவர்கள் வேறு வகை லைசென்சு வாங்க வேண்டியதில்லை. ஆனால் தொழில் நடக்கும் ஒவ்வொரு இடத்திற்கும் தனித் தனி லைசென்சு வாங்கிக் கொள்ளவேண்டும். (16-1-1951 சென்னை-சர்க்கார் கெஜட் பாகம் II-ரூல் சப்ளிமெண்ட்-பக்கம் 7) [குறிப்பு:— 1949ஆம் வருடத்திய சென்னை எரு வியாபாரிகள் லைசென்சு உத்தரவு "வக்கீல்" 1950 ஜனவரி இதழ் பக்கம் 25-ல் விளக்கப்பட்டிருக்கிறது. எரு என்பது புண்ணாக்கு (இலுப்பை, எள், தேங்காய்ப் புண்ணாக்கு நீங்கலாக மற்றப் புண்ணாக்கு) எலும்பு, எலும்புத்தூள், போன் மீல், போன் சூபர், மீன் எரு, பிஷ்குவானோ, அமோனியம் சல்பேட், அமோபாஸ், நிசிபாஸ் பேசில்சிலாக், பொடாசியம் சல்பேட், பொடாசியம் நைட்ரேட், கைநிட் இவைகளையும் பக்குவம் செய்யப்பட்டு வியாபாரத்திற்காகக் கலக்கப்பட்ட எருக்களையும் குறிக்கும். மேலும் ஒருதடவைக்கு ஒரு மணங்குக்குக் குறையாமல் எரு விற்கும் வியாபாரிகளையும், விசை அல்லது பிரஸ்ஸால் ஓடும் செக்கு வைத்திருப்பவர்களையும்தான் இந்த உத்தரவு கட்டுப்படுத்தும்]

கெடுவுக்குள் எரு லைசென்சு புதுப்பிக்காவிட்டால்

எரு லைசென்சு எப்பொழுது வாங்கினாலும் அடுத்த மார்ச்சு மாதம் 31 தேதியோடு அது முடிந்து விடும். அக்கெடு முடியும் முன்பே அதைப்புதுப்பித்துக் கொள்ளக் கட்டணம் கட்டி மனுப் போட்டு விட வேண்டும். கெடுவுக்குள் மனுப்போடத் தவறினால் அடுத்த ஜூன் 30 வரையிலும் அனுப்பப்படும் மனுக்கள் மனு ஒன்றுக்கு லைசென்சு கட்டணத்துடன் ரூ. 2 வீதம் அபராதத் தொகையும் சேர்த்து அனுப்பினால், அம்மனுக்களும் ஏற்றுக் கொள்ளப்படும். (6—2—1951 சென்னை-சர்க்கார் கெஜட் பாகம் II-ரூல் சப்ளிமெண்ட்—23)

ஷாப் சட்டம்

சினிமாக் கொட்டகைகள்: தினசரி சினிமாக் கொட்டகைகள் எந்த மணி நேரத்திற்கு முன் திறக்கக்கூடாதென்றும், எந்த மணி நேரத்திற்குப் பிறகு திறந்து வைத்திருக்கக் கூடாதென்றும் ஷாப் சட்டத்தின் செக்ஷன் 13 (1)-ல் அடங்கிய விதியினின்று சென்னை ராஜ்யத்திலுள்ள முனிசிபாலிடிகளில் இருக்கும் எல்லாச் சினிமாக் கொட்டகைகளுக்கும் 16—1—1951 முதல் ஒரு வருடத்திற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

காலை 9-30 மணியிலிருந்து 11-30 மணி வரையில் இவர்கள் டிக்கட் விற்பனை செய்ய வசதி அளிக்கவே இவ்விதி விலக்கு அளிக்கப்

பட்டதாகச் சர்க்கார் உத்தரவில் காரணம் காண்பிக்கப்பட்டிருக்கிறது. (16—1—1951 சென்னை-சர்க்கார் கெஜட்—பாகம் I-பக்கம் 91)

ரயில்வே புக் ஸ்டால்கள் விதி விலக்கு

இனி ஷாப் சட்டத்தின் எந்த விதிகளும் ரயில்வே ஸ்டேஷன்களிலிருக்கும் 'புக் ஸ்டால்' களுக்குக் கிடையாதென்று சர்க்காரால் சாசுவத விதி விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது.

(23—1—1951 சென்னை-சர்க்கார் கெஜட்-பாகம் I-பக்கம் 122)

சில இடங்களில் சந்தை கூடும் தினத்தன்று மட்டில் திறந்து மூடும் மணி நேரம் கிடையாது-விதி விலக்கு

தினசரி எந்த மணி நேரத்திற்குமுன் கடைகளையோ வேறு ஸ்தாபனங்களையோ திறக்கக் கூடாதென்றும், எந்த மணி நேரத்திற்குப் பிறகு அவைகளைத் திறந்து வைத்திருக்கக் கூடாதென்றும் உள்ள ஷாப் சட்டத்தின் செக்ஷன் 7 (1)-ல் அடங்கிய விதி, கீழ்க்கண்ட முனிசிபாலிடிகளிலும் மேஜர் பஞ்சாயத்துக்களிலும் அததற்கு நேரே குறிப்பிடப் பட்டிருக்கும் வாராந்தரச் சந்தை கூடும் தினத்தன்று மட்டில், கிடையாது. அதாவது ஒவ்வொரு வாரத்திலும் அந்தந்த ஊரில், குறிப்பிட்ட தினத்தன்று மட்டில் (ஷாப் சட்டத்தின் மற்ற விதிகளை அனுசரித்து) எந்த நேரத்திலும், கடை, ஹோட்டல் முதலிய ஸ்தாபனங்கள் திறக்கலாம், திறந்து வைத்திருக்கலாம். இந்த விதி விலக்கு 30—1—1951 முதல் ஒரு வருடத்திற்கு மட்டில்தான் அளிக்கப் பட்டிருக்கிறது.

இடங்களின் விபரம்

ஞாயிற்றுக்கிழமை: பெனுகொண்டா, கதிரி, ஆனைமலை, வால்பாறை, முடிஸ், பெரிய நாயக்கன்பாளையம், அரியலூர், தேனி, பெரிண்டல்மன்னா, நிலாம்பூர், திரூர், வால்பாறை ஆகிய மேஜர் பஞ்சாயத்துக்கள்.

திங்கட்கிழமை: உடுமலைப்பேட்டை, முனிசிபாலிடி தர்மாவரம், பல்லடம், காங்கயம், தூடியலூர்—வெள்ளக்கிணர், ஜெயங்கொண்டம், உதக்குடி, மேஜர் பஞ்சாயத்துக்கள்.

செவ்வாய்க்கிழமை: தாராபுரம், திருப்பூர் முனிசிபாலிடிகள்; மதனப்பள்ளி, பெரம்பலூர், மேஜர் பஞ்சாயத்துக்கள்.

புதன்கிழமை: வயல்பாடு, ஷோலிங்கர், கோட்டூர், அவிஞசி, மணப்பாறை, உசிலம்பட்டி, சௌகாட், மேஜர் பஞ்சாயத்துக்கள்.

வியாழக்கிழமை: ஈரோடு, பொள்ளாச்சி, போடிநாயக்கனூர், ராஜப்பாளையம், மேலப்பாளையம், முனிசிபாலிடிகள்; புளியம்பட்டி மேஜர் பஞ்சாயத்துக்கள்.

வெள்ளிக்கிழமை: பொள்ளாச்சி முனிசிபாலிடி, நகரி, ராணிப்பேட்டை, காரமடை, லால்குடி, துறையூர், திசையன்விளை, ஒத்தப்பாலம்,—மேஜர் பஞ்சாயத்துக்கள்.

சனிக்கிழமை: மேட்டுப்பாளையம் முனிசிபாலிடி, வேட்டக்காரன் புதூர், வால்பாறை, அன்னூர் மேஜர் பஞ்சாயத்துக்கள்.

சைகிள் டயர், டியூப்—விலை நிர்ணயம்

1950 சரக்கு சப்ளை-விலைச் சட்டத்தின்படி சைகிள் டயர், டியூப்களுக்கு (Cycle tyres and tubes) கீழ்க்கண்டபடி பத்திய சர்க்காரால், உச்சவிலை நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது.

விலை	டயர்கள் TYRES W. O. Rs.As.Ps.	டயர்கள் TYRES B. E. Rs.As.Ps.	டியூபுகள் TUBES Rs.As.Ps.
1. Bates Dunlop Goodyear Deluxe AWT/Roadking. Firestone Champion Deluxe/Roadmaster India Super Other brands not mentioned in the schedule	6-0-0	8-10-0	3-4-0
2. Dunlop Cambridge Goodyear Marathon/Dehati. FirestoneHighspeed India signal	5-4-0		3-4-0
3. Dunlop Royal Durbar/Phalawan. Goodyear Takat India Sterling	4-12-0	6-14-0	3-4-0

(1-1-1951- இந்தியா கெஜட்-விசேஷ வெளியீடு-பாகம் II-செக்ஷன் 3-பக்கம் 51.)

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

சட்டப்படி ஒரு விவசாயி கொடுக்க வேண்டிய வட்டிக்குமேல் அதிகத் தொகையை வட்டிக்கென்றே கொடுத்தாலும் அதை அசலில் ஈடு செய்து கொள்ளவேண்டும்,

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்

நீதிபதிகள்: கனம் நீதிபதி சுப்பராவ் அவர்கள்; கனம் நீதிபதி பஞ்சாபகேசய்யர் அவர்கள்; கனம் நீதிபதி பாலகிருஷ்ணய்யர் அவர்கள்.

ஆதாரம்: 1951 (1) மதராஸ் லா ஜர்னல் - 42.

சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் சம்பந்தமான ஒரு முக்கிய விஷயம் இவ்வழக்கில் மூன்று உயர் நீதிபதிகளால் பரிசிலனை செய்யப்பட்டு, தீர்ப்பளிக்கப் பட்டது. ஒரு விவசாயி தாம் வாங்கிய கடனுக்கு 1—10—1937-க்குப் பிறகு வட்டி கொடுத்தார். அவர் கொடுக்கும் போது அத்தொகையை வட்டிக்கென்றேதான் கொடுத்தார். ஆனால் சட்டப்படி அவ்விவசாயி எவ்வளவு வட்டி கொடுக்க வேண்டுமோ அதற்கு மிக அதிகமாகவே அத்தொகை இருந்தது. இவ்விதம் சட்டப்படிக்கான வட்டியை விட அதிகமாக வட்டிக் கென்றே கொடுக்கப் பட்டிருக்கும் தொகையை என்ன செய்வது? விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தில் கடன் வாங்கியவர் சட்டப்படிக்கான வட்டிக்குமேல் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் அவர் அதற்கதிகமான வட்டியைக் கொடுத்து விட்டால் அப்படி அதிக வட்டிக்காகக் கொடுத்தத் தொகையைத் திரும்ப வாங்க முடியாதென்று இருக்கிறது. இதற்கு என்ன அர்த்தம்? திருப்பி வாங்க முடியாத தொகை போனதுதானா? அல்லது அத் தொகையை அசல் தொகைக்கு ஈடு செய்து கொள்ளவேண்டுமா என்ற விவாதம் இவ்வழக்கில் ஏற்பட்டது. சட்டப்படிக்குள்ள வட்டிக்கு மேல் அதிகமாகக் கொடுக்கப்படும் தொகைகளை, ரொக்கமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லையே ஒழிய, அதை அசல் தொகையில் கழித்துக் கொள்ள வேண்டுமென்று மூன்று நீதிபதிகளும் ஏகோபித்த அபிப்பிராயம் அளித்தனர். கடன் ஏற்பட்டது 1—10—1932க்கு முன் இருந்தாலும் அதற்குப்பின் இருந்தாலும் இதே விதம்தான் செய்ய வேண்டுமென்றும் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். இதற்கு மாறான அபிப்பிராயங்கள் அடங்கிய வேறு வழக்குகளில் அளிக்கப்பட்ட இரண்டு முந்திய தீர்ப்புகள் சரி அல்ல வென்றும் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் நிலத்தைக் கிரயம் வாங்குபவரின் பாத்தியம்.

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்
நீதிபதி: கனம் நீதிபதி பஞ்சாபகேச அய்யர் அவர்கள்.
ஆதாரம்: *1951 (1) மதராஸ் லா ஜர்னல்-69.*

சுப்பிரமணிய பிள்ளை என்பவரிடம் பூங்காவனம் பிள்ளை 1 எக்கர் 56 சென்டு நிலத்தை 27—1—1948-ல் ரூ. 3500க்கு கிரயம் வாங்கினார். கிரயம் செய்யப்பட்ட நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருந்த படியால், கிரயத் தேதியில், குத்தகைதாரரால் சாகுபடி செய்யப்பட்ட நெல் பயிர் கிரய சொத்தில் இருந்தது. வருடம் 1-க்கு குத்தகை நெல் கலம் 24½ கிரயத்தேதிக்கு முன்பே குத்தகைதார் 17½ கலம் அளந்து விட்ட படியால், கிரயத் தேதியில் அவர் கொடுக்க வேண்டிய பாக்கி 7 கலம் தான் இருந்தது. ஆனால் இக்குத்தகையைப் பற்றியாவது, 7 கலம் தான் குத்தகை பாக்கி என்பதாவது ஒன்றும் கிரயப்பத்திரத்தில் பிரஸ்தாபிக்கப் படவில்லை. கிரயம் செய்யப்பட்ட ஒரு மாதம் சென்ற பின் குத்தகைதார் மகசூலை அறுவடை செய்தார். கிரயம் வாங்கிய பூங்காவனம் பிள்ளை ஜாடா குத்தகை நெல்லும் தமக்கு அளக்கப்பட வேண்டுமென்று கிரயம் செய்தவரையும், குத்தகைதாரையும் கேட்டார். தாம் கொடுக்க வேண்டிய பாக்கி 7 கலம்தான் என்று குத்தகைதார் தெரிவித்து விட்டார். கிரயம் செய்தவரும் 7 கலம்தான் பாக்கி என்றும், ஆனால் கிரயம் பெற்றவருக்கு அது கிடைக்கத் தக்கதில்லை என்றும், இருந்தாலும் இது சம்பந்தமான வழக்கு வேண்டாமென்று அந்த 7 கல நெல்லையும் கிரயதாரே வாங்கிக் கொள்ளத் தமக்கு ஆட்சேபனை இல்லை என்றும் தெரிவித்தார்.

கிரயதார் இதை ஒப்புக் கொள்ளவில்லை. ஜாடா குத்தகை நெல் 24½ கலமும் தமக்குக் கிடைக்கவேண்டு மென்றும் அதன் கிரயம் ரூ. 234—2—0க்கு கிரயதார் மீதும் குத்தகைதார் மீதும் ஸ்மால்காஸ் தாவா தொடர்ந்தார். கீழ்க்கோர்ட்டில் கிரயதாருக்கு 2 கலம் தான் கிடைக்கத் தக்க தென்று, அதன் கிரயம் ரூ. 24-க்குத் தீர்ப்புச் செய்யப் பட்டது.

இத்தீர்ப்பு சரி அல்ல என்று கிரயம் வாங்கியவர் ஹை கோர்ட்டுக்கு ரிவிஷன் செய்தார். ஹைகோர்ட்டில் உயர் நீதிபதி அவர்கள் இது சம்பந்தமான சட்டத்தைப் பரிசீலனை செய்து கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பே சரி என்று அபிப்பிராயப் பட்டனர்.

நிலங்கள் விற்பனை செய்யப்படும்போது அதிலுள்ள மகசூல் சம்பந்தமாய் மூன்று வகையான சந்தர்ப்பங்கள் ஏற்படலாமென்றும், ஒவ்வொன்றுக்குமான சட்டம் என்ன என்றும் நீதிபதி அவர்கள் விளக்கி இருக்கின்றனர். அவையாவன:

(1) கிரயம் ஏற்படும் போது நிலத்தில் மகசூல் இருந்தாலும், நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருந்தாலும், மகசூலையோ, ஜாடா குத்தகைத் தொகை அல்லது நெல்லையோ கிரயம் செய்பவரே அடைய வேண்டிய தென்று கிரயப் பத்திரத்தில் வியக்தமாய்க் கண்டிருந்தாலும், அல்லது அவைகளைக் கிரயம் பெற்றவரே ஜாடாவாக அடைய வேண்டிய தென்று கண்டிருந்தாலும்; அல்லது கிரயம் செய்பவர் எவ்வளவு பாகம் அடைய வேண்டிய தென்றும், கிரயம் பெற்றவர் எவ்வளவு பாகம் அடைய வேண்டிய தென்றும் வியக்தமாகக்கண்டு கிரயப் பத்திரத்தில் எழுதப்பட்டிருந்தாலும், அல்லது வேறு வகையில் இவ்விதம் இருவரும் ஒப்புக் கொண்டு ஏற்பாடு செய்திருந்தாலும் அதன்படி மகசூலையோ, குத்தகை தானியம் அல்லது தொகையையே அவரவர் அடையப் பாத்தியம் உள்ளவர்.

(2) அவ்விதம் இருவரும் வியக்தமாய் ஒரு ஏற்பாடு செய்து கொள்ளாவிட்டாலும், இருவர்களும் நடந்துகொள்ளும் முறையிலிருந்து ஒரு ஏற்பாடு நடந்திருக்க வேண்டுமென்று ஊகிப்பது சாத்தியமானால்—அவ்வித ஏற்பாடும் இருவர்களையும் கட்டுப்படுத்தும். உதாரணமாக, கிரயம் ஏற்பட்ட பிறகு, கிரயம் பெற்றவருக்குத் தெரிந்தும் அவர் ஆட்சேபனை செய்யாமலோ,

187705

அல்லது அவர் சம்மதத்தின் பேரிலோ கிரயம் செய்தவரே மகசூலை அறுவடை செய்யலாம்; அல்லது கிரயம் செய்தவருக்குத் தெரிந்தும் அவர் ஆட்சேபனை செய்யாமலோ அல்லது அவர் சம்மதத்தின் பேரிலோ கிரயம் பெற்றவர் மகசூலை அறுவடை செய்யலாம்; ஒருவருடைய செய்கையை மற்றவர் ஆட்சேபிக்காமலிருந்ததி லிருந்தே அவர்கள் என்ன ஏற்பாடு செய்து கொண்டிருக்க வேண்டுமென்று ஊகிப்பது சாத்தியமாகும். இச்சந்தர்ப்பத்திலும் அவ்வித ஏற்பாடு இருவரையும் சட்டப்படி கட்டுப் படுத்தும்.

(3) மேற்கண்டபடி வியக்தமாகவோ, ஊகிக்கக்கூடியதாகவோ யாதொரு ஏற்பாடும் இல்லாவிட்டால் சட்டம் இது தான். அதாவது கிரய சொத்தில் கிரயத் தேதிக்கு முன் ஏற்பட் டுள்ள வரும்படிகளைக் கிரயம் செய்தவர் அடைய வேண்டியது; கிரயத்தேதி முதல் ஏற்பட் டுள்ள வரும்படிகளைக் கிரயம் பெற்றவர் அடைய வேண்டியது. இதைச் சொத்து மாற்றல் சட்டத் தின் (Transfer of Property Act) 36-வது செக்ஷன்படி கணக்குச் செய்யவேண்டியது. அதாவது, மகசூல் எந்தத் தேதியில் அறுவடை யானாலும், அல்லது குத்தகைதாரர் எந்தத் தேதியில் குத்தகை தானியத்தை கொடுக்க வேண்டியதாக இருந்தாலும்—அவை எல்லாம் ஒவ்வொரு நாளும் வீதாசாரமாக ஏற்படும் வரும்படியாகவே சட்டத்தில் பாவிக்கப்படும். உதாரணமாக, கிரய சொத்துக்கு 12 மாதங்களுக் குக்குத்தகை நெல் கலம் 24. குத்தகை ஏற்பட்டு 11 மாதங்கள் சென்றபின் அச்சொத்து, கிரயம் செய்யப்பட்டால் 12-ல் 11 பங்கு குத்தகையைக் கிரயம் செய்பவர் அடையப் பாத்தியமுள்ளவர்; பாக்கி 12-ல் 1-பங்கு குத்தகையைத்தான் கிரயம் பெற்றவர் அடையப் பாத்தியமுள்ளவர். குத்தகைதாரர் ஜாடா குத்தகையையும் கொடுக்கவேண்டிய கெடுவானது, கிரயத் தேதிக்குப் பின் இருந்தாலும் — மேற்கண்ட வீதாசாரப்படிதான் நிலம் விற்றவரும் வாங்கிய வரும் அதைப் பிரித்துக்கொள்ள வேண்டியது.

இவ்வழக்கில் மேற்கண்ட விதிதான் அனுஷ்டிக்கப்பட்டது. அதாவது, கிரயம் ஏற்படும்போது குத்தகைக் கெடுவில் 1 மாதம் தான் பாக்கி இருந்தது. அந்த ஒரு மாதத்திற் குள்ள வீதாசாரமான இரண்டு கலம் நெல்தான் கிரயதாருக்குக் கிடைக்குமென்றும் உயர் நீதிபதி அவர்கள் தீர்ப்பளித்தனர்.

இச்சட்டம் தெரிந்திருந்தால் கிரயதார் பூங்காவனம் பிள்ளை வழக்குத் தொடர்ந்திருக்க மாட்டார். கிரயம் செய்தவரும் குத்தகைதாரும் கொடுப்பதாகச் சொன்ன 7 கலம் நெல்லையே வாங்கிக்கொண்டிருப்பார். பூங்காவனம் பிள்ளை இந்த இரண்டு கலம் நெல்லை அடைய ஹைகோர்ட் வரை எவ்வளவு செலவு செய்திருந் தாலும் பாதகமில்லை. ஏனென்றால் இது சம்பந்தமான சட்டம் என்ன என்று நீதிபதி அவர்கள் மிகத் தெளிவாக விளக்கம் செய்ய இந்த வழக்கு ஒரு சந்தர்ப்பமாக அமைந்ததே போதும்.

பெயர் இரவல் அல்லது 'பினாமி' சாசனங்கள்

கோர்ட்: ஒரிஸா ஹைகோர்ட்

நீதிபதிகள்: கனம் நீதிபதி ஜகன்னாத தாஸ் அவர்களும் கனம் நீதிபதி நரசிம்மம் அவர்களும்.

ஆதாரம்: 1951 ஆல் இந்தியா ரிபோர்ட்டர் - (ஒரிஸா) 22.

வீண் விவகாரங்கள் செழிப்பாக வளர்வதற் கான சில இடங்கள் இந்தியச் சட்டத்தில் இருக்கின்றன. அவைகளில் முக்கியமானது 'பெயர் இரவல்' 'காரணார்த்தம்' அல்லது 'பினாமி' சாசனங்கள் என்பவை.

ஒரு நிலமோ வீடோ யாருடையதென்று கண்டுபிடிப்பது மற்ற நாடுகளில் மிகச்சுலபமாக இருந்தாலும், நம் நாட்டில் அவ்வளவு சுலப மானதல்ல. இதைக் கண்டு பிடிக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் அவசியமும் பல வகைகளில் ஏற்படலாம். உதாரணமாக, நீங்கள் ஒருவருக் குக் கடன் கொடுத்து அவர் மீது டிகிரி வாங்கி அவர் வசித்துவரும் வீட்டை ஜப்தி செய்யும் போதுதான், பல வருடங்களுக்கு முன் அச்

சொத்து அவருடைய மனைவியின் பெயரால் வாங்கப்பட்டிருக்கும் விஷயம் உங்களுக்குப் புலப்படும். இதுதான் அவ்விவகாரத்தின் நாற்றங்கால். அதிலிருந்து நடவடிக்கைகள் படிப்படியாக ஓங்கி வளரும். உங்கள் கடன்காரரின் மனைவி அச்சொத்துத் தம்முடையதென்றும், அவளுடைய கணவனுக்கு யாதொரு பாத்தியமுமில்லை என்றும் கணவனுடைய கடனுக்காகத் தம் சொத்தை ஜப்தி செய்திருப்பது தவறென்றும் அவள் கோர்ட்டில் மனுக் கொடுப்பாள். முதலில் கொஞ்சம் ஏமாற்றமடைந்தாலும் நீங்களும் அதை அப்படியே விட்டு விட மாட்டீர்கள். நீங்கள் ஜப்தி செய்த வீடு உங்களிடம் கடன் வாங்கியவருடைய சொத்துத்தான் என்றும், அவர்தான் அதைத் தம் மனைவியின் 'பெயரால்' வாங்கியிருக்கிறாரே ஒழிய அவர்தான் அதன் உண்மையான பாத்தியஸ்தர் என்றும், அதை ஜப்தி செய்ய உங்களுக்கு உரிமை உண்டென்றும் தான் சொல்லுவீர்கள்.

வேறு ஒரு உதாரணத்தையும் எடுத்துக் கொள்ளலாம். ஒருவர் தம் பணத்தைக் கொண்டு சொத்து வாங்கும்போது பல காரணங்களைக் கொண்டு வேறு ஒருவர் 'பெயரில்' அதை வாங்கலாம். அதிர்ஷ்டப் பெயரால் சாசனங்கள் வாங்குபவர்களும் உண்டு. கடன்களுக்குப் பயந்து முன் ஜாக்கிரதையாகச் சொத்தை வேறு ஒருவர் பெயரில் வாங்குபவர்களும் உண்டு. தம் மீது இருக்கும் சொத்தைத் தம் மனைவி மீதோ வேறு ஒரு நெருங்கிய உறவினர் மீதோ மாற்றி வைப்பதும் உண்டு. இப்படிச் செய்பவர்களுக்கும் தம் பெயரை இரவல் கொடுத்தவர்களுக்குமிடையே கூட விவகாரங்கள் ஏற்படலாம். நீங்கள் யாரை நம்பி ஒரு சொத்தை அவர் 'பெயரால்' வாங்கினீர்களோ, அவரே உங்களுக்குத் துரோகம் செய்து, அச்சொத்துத் தம்முடையதுதான் என்றும் சாதனை செய்யலாம். இச்சந்தர்ப்பங்களில் ஒரு சொத்தின் உண்மையான சொந்தக்காரர் யார் என்று நிர்ணயம் செய்வது சுலபமான காரியம் அல்ல. அதே ருசுக்களையும் சாட்சியங்களையும் ஆதாரமாகக் கொண்டு ஒரு நீதிபதி ஒரு தினுசாகவும் வேறு ஒரு நீதிபதி வேறு தினுசாகவும் அபிப்பிராயப்படுவதற்கும் இடமிருக்கின்றது.

இவ்வழக்கில் வனமாலி என்பவரும் அவருடைய மகன்களும் சில சொத்துக்களை அடமானமாக வைத்து ஒரு பாங்கியில் ரூ. 25,000 கடன் வாங்கினர். அதன் பேரில் பாங்குக்காரர்கள் தாவா செய்து டிக்ரி வாங்கி அச்சொத்துக்களை ஏலம் போடும் சமயத்தில் வனமாலியின் பெண்கள் அதை ஆட்சேபித்தனர். அச்சொத்துக்கள் தங்கள் தாயார் கௌரியின் சொத்துக்கள் என்றும், அவள் இறந்த பிறகு அவளுடைய பெண் மக்களான தாங்கள் தான் அவளுடைய வார்சுகள் என்றும், தங்கள் தகப்பனுக்கோ சகோதரர்களுக்கோ அச்சொத்துக்களை அடமானம் வைக்க உரிமை இல்லை என்றும் கண்டு அப்பெண் மக்கள் நடவடிக்கைகள் ஆரம்பித்தனர். பாங்குக்காரர்கள் இதை ஆட்சேபித்தனர். சொத்துக்கள் எல்லாம் வனமாலியின் சொத்துக்கள்தான் என்றும் அவர் அவைகளைத் தம் மனைவி கௌரியின் மீது 'பெயர் இரவலாக' (பினாமியாக)வாங்கினாரே ஒழிய, கௌரிக்கு அவைகளில் யாதொரு பாத்தியமும் இல்லை என்றும் கட்சி சொன்னார்கள்.

இச்சொத்துக்கள் 6 கிரய சாசனங்களின் மூலம் 1902 முதல் 1923-க்கு இடையே வாங்கப்பட்டவை. இவ்வித வழக்குகளில் யாருடைய பணத்தைக் கொண்டு இவை வாங்கப்பட்டவை என்று பார்ப்பது மிக முக்கியம். இவைகள் எல்லாம் வனமாலியின் தொகைகளைக் கொண்டே வாங்கப்பட்டவை என்று ஊகிக்க இடமிருந்தது. கௌரிக்குத் தனியாக யாதொரு மஞ்சக்காணிப் பணமும் இல்லை என்று ருசுவாயிற்று. சில சாசனங்களில் சாட்டுதல் போட்டுக் கொண்ட கடன்கள் வனமாலிக்கு வரவேண்டிய கடன்களாகவே இருந்தன. அதே காலங்களில் வனமாலியிடம் பணப் புழக்கம் அதிகமாக இருந்து, அவர் தம் பெயராலேயே வேறு சொத்துக்களும வாங்கி இருக்கிறார். இச்சொத்துக்களில் சிலவற்றில் புதிய கட்டிடங்கள் கட்டச் செலவு செய்தது

வனமாலியே. இக்காரணங்களைக் கொண்டு சொத்துக்களைத் தம் மனைவியின் 'பெயரால்' வாங்கினாலும் அவைகள் கணவனுடைய தொகைகளைக் கொண்டேதான் வாங்கப்பட்டன என்று ஏற்பட்டது.

இதுமட்டில் போதுமா? கணவனுடைய தொகைகளைக் கொண்டு அவர் தம் மனைவிக்கே சொத்துக்கள் வாங்கிக் கொடுக்கக் கூடாதா? பல காரணங்களைக் கொண்டு ஒருவர் தம்முடைய பணத்தைக்கொண்டு தம்மனைவிக்கோ மக்களுக்கோ சொத்துக்களை வாங்கிக் கொடுப்பதில் என்ன தவறு? அப்படிச் செய்திருந்தால் சொத்துக்கள் யாருடைய நன்மைக்காக, யாருடைய உபயோகத்திற்காக வாங்கிக் கொடுக்கப்படுகிறதோ அவர்களேதான் அச்சொத்திற்குப் பாத்தியஸ்தர்கள் ஆவார்கள். இதற்கு ஆங்கிலத்தில் 'அட்வான்ஸ்மெண்ட்' (Advancement) என்று சொல்வது. அதாவது ஒருவர் தம் பணத்தைக் கொண்டு வேறு ஒருவருக்குச் சொத்து வாங்கிக் கொடுப்பது. அப்பொழுது சொத்து யார் பெயரில் வாங்கப் படுகின்றதோ அவருக்குத்தான் பாத்தியம். பணம் கொடுத்தவருக்கு அதில் பாத்தியமில்லை. இது பண்ம் கொடுப்பவரின் எண்ணத்தைப் பொறுத்தது. இது விஷயத்தில் ஆங்கிலேயர்களின் சட்டத்திற்கும் நமது சட்டத்திற்கும் வித்தியாசம் உண்டு. இங்கிலாந்தில் யார் பெயருக்கு ஒரு சொத்து வாங்கப் படுகின்றதோ அவருடைய நன்மைக்காகவே, அது வாங்கப்பட்டதாகவும், சொத்து அவருடையதென்றும் தான் முதலில் பாவிக்கப்படும். இந்தியாவில் அவ்விதம் பாவிக்கப்படமாட்டாது. ஆனால் அதை ருசுப்பிக்கலாம். அதாவது, ஒரு சொத்து யார் பெயரால் வாங்கப் படுகின்றதோ அவரே அதன் சொந்தக்காரராக அதை அடையவேண்டுமென்ற எண்ணத்துடன் அது வாங்கப்பட்டதென்று ருசுப்பிக்கலாம்.

இந்த வழக்கிலும் அக்கட்சி சொல்லப்பட்டது. வனமாலி தம் தொகைகளைக் கொண்டு வாங்கிய சொத்துக்களைத் தம் மனைவி கௌரியே அடைய வேண்டுமென்ற எண்ணத்துடன்தான் அவள் பெயரால் அச்சொத்துக்களை வாங்கினார்—ஆகையால் சொத்துக்கள் பெயர் இரவலாகவோ, காரணார்த்தமாகவோ வாங்கப்படவில்லை என்று வாதாடப்பட்டது. இதை நீதிபதிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென்றால் இவ்வழக்கில் அதற்கான ருசு போதாதென்று அபிப்பிராயப்பட்டனர்.

ஆனால், இதற்குமுன் நடந்த பல வழக்குகளில் இவ்விதமான கட்சிகள் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன. அவைகளில் எவ்வித சந்தர்ப்பங்கள் ருசுவாயின என்று பார்ப்போம்.

(1) 1932ல் பிரிவி கவுன்சிலால் தீர்ப்பளித்த ஒரு வழக்கில் (1932-ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—பிரிவி கவுன்சில் 13) ஒரு முஸ்லீம் தப்பணத்தைக் கொண்டு தம்முடைய செல்லப்பெண் பெயரில் ஒரு சொத்தை வாங்கி இருந்தார். அப்பெண்ணின் கலியாண காலத்தில் இச்சாசனத்தை அவளுடைய கணவனின் தகப்பனிடம் காண்பித்து 'இது என் மகளின் சொத்துக்களுக்கான சாசனம்' என்று சொன்னார். சொத்தைத் தம்மகளுக்கென்றேதான் தகப்பன் வாங்கினார் என்பதற்கு இந்த ருசு போதுமென்று அங்கீகரிக்கப்பட்டது. (2) 1945ல் நடந்த மற்றொரு பிரிவி கவுன்சில் வழக்கில் (ஆல் இந்தியா ரிபோர்ட்டர் 1945 பிரிவி கவுன்சில்—10) ஒருவர் பாங்கில் பணம் போட்டிருந்தார். தம்பெயரால் மட்டில் போடவில்லை. தம் பெயருடன், தம்முடைய சில நெருங்கிய உறவினர்கள் பெயரிலும் போட்டிருந்தார். இவர்கள் விதவைகள் என்றும், அவரையே ஜீவனத்திற்கு நம்பி இருந்தவர்கள் என்றும் ருசுவாயிற்று. அவர் இறந்துபோன பிறகு பாங்கில் இருந்த தொகைகள் அந்த ஸ்திரீகளைச் சேர்ந்தவை என்று நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டனர். (3) 1931ல் நடந்த ஒரு பிரிவி கவுன்சில் வழக்கில் (1931-ஆல் இந்தியா ரிபோர்ட்டர் — பிரிவி கவுன்சில் 175) புதிதாக மணம் செய்து கொண்ட ஒருவர் தம் மனைவி பெயருக்கு ஒரு இனாம் சாசனம் செய்து வைத்தார். அவர் ஒரு டாம்பீக வாழ்வு வாழ்ந்து வந்தாரென்றும், உறவினர்களின் ஆலோசனையின் பேரில் தம் மனைவியின் ஜீவனத்திற்குச் சில சொத்துக்களை ஒதுக்கவேண்டுமென்ற எண்ணத்துடனேயே அந்த இனாம் சாசனம் செய்யப்பட்டதென்றும் ருசுவாயிற்று. இது பெயர் இரவல் சாசனமல்ல என்று, இனாம் பத்திரத்தில் கண்ட சொத்து மனைவியைச் சேர்ந்ததே என்றும் நீதிபதிகள் தீர்மானித்தனர்.

கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் **அபிப்பிராயமே.**

32. **கேள்வி:** (சுப்பிரமணியம் செட்டியார்-துகிலி) ஒரு பிராமிசரி நோட் 'மேடோவர்' செய்யப்பட்டிருந்தால் 'மேடோவர்' வாங்கிக் கொண்ட நபர் வேறு ஆசாமிக்கு அதை மறுமடியும் மேடோவர் கொடுக்கலாமா? அப்படி செய்திருந்தால் அது செல்லுமா?

பதில்: ஒரு பிராமிசரி நோட்டை எவ்வளவு தடவை வேண்டுமானாலும் மேடோவர் செய்யலாம். ஆனால், பிராமிசரி நோட் எழுதிக் கொடுத்தவர் எப்படி அதன் தொகையைக் கொடுக்கக் கடமைப்பட்டவரோ, அதேபோல் 'மேடோவர்' செய்யும் ஒவ்வொருவரும் அத்தொகையைக் கொடுக்கச் சட்டப்படி கடமைப்பட்டவராவார். இது பொது விதி. ஆனால் மேடோவர் செய்பவர் எவரும் "என் மீது பின் தொடர்ச்சியில்லாமல் இதை 'மேடோவர்' செய்து கொடுத்தேன்" (without recourse) என்று அர்த்தமாகும்படி எழுதியும் மேடோவர் செய்யலாம். அப்படி மேடோவர் செய்பவரின் மீது பொறுப்பு ஏற்படாது.

33. **கேள்வி:** (சுப்பிரமணியம் — பழனூர்) 1935ல் ஏற்பட்ட ஒத்திப் பாத்தியம் 1937ல் ஒரு தடவையும் 1943ல் மறுபடியும் 'மேடோவர்' ஆகி இருந்தால், அதற்கு இப்பொழுதுள்ள ஒத்திச் சட்டப்படி தொகைக் கழிவு உண்டா?

பதில்: அசல் தொகையில் யாதொரு கழிவும் ஏற்படாது. ஆனால் அசல் தொகையை விடக் குறைந்த தொகைக்கு 1943ல் மேடோவர் வாங்கப்பட்டிருந்தால், ஒத்தியை மீட்க, அத்தொகைக்கு மேல் கொடுக்கவேண்டியதில்லை.

34. **கேள்வி:** (பாலு-திருச்சி) தம் கணவன் இறந்த பிறகு அவர் சொத்தை அனுபவித்து வரும் ஒரு ஸ்திரீ, தமக்குக் குழந்தை இல்லாததால், தம் தங்கைக் குழந்தைகள் இருவரில் இளையவனைச் சுவீகாரமாகப் பெயரளவில் எடுத்து வளர்த்து வந்தாள். பிறகு சொத்தை அத்தங்கையின் கணவனுக்கே அவள் நிபத்துக் கிரயம் செய்து வைக்கிறாள். சுவீகார புத்திரன் விவாகமாகி இரு பெண் குழந்தைகளை விட்டு இறந்து விட்டால் சொத்து யாரைச் சேரும்? அந்த ஸ்திரீக்கா, இறந்த சுவீகார மகனின் மனைவிக்கா, பெண்கள் இருவருக்கா, கிரயம் அடைந்த தங்கைப் புருடனுக்கா?

பதில்: குழப்பங்கள் அடங்கிய கேள்வி. பல பதில்கள் சொல்லலாம். சட்டப்படி சுவீகாரம் எடுத்துக் கொள்வதற்கும், 'சுவீகாரமாகப் பெயரளவில் வளர்த்து வருவதற்கும்' ஏராளமான வித்தியாசம் உண்டு.

(1) சட்டப்படி எடுத்துக் கொள்ளப்பட்ட சுவீகார மகனுக்குச் சொந்த மகனைப் போலவே எல்லா உரிமைகளும் உண்டு. சுவீகாரம் ஏற்

பட்ட உடனேயே அம்மகன் தம் சுவீகாரத் தகப்பனுடைய சொத்துக்களுக்கு உரிமையாளன் ஆவான். சுவீகாரம் ஏற்பட்ட பிறகு அச்சொத்துக்களைத் தன் சொத்தைப்போல் நினைத்துச் சுவீகாரத் தாயார் விற்பது செல்லாது. சுவீகார மகன் இறந்தவுடன் அவனுடைய மனைவியே வார்சு ஆவாள். ஆனால் அவள் ஆயுள் வரைதான் சாதாரணமாய் அச்சொத்தை அனுபவிக்கலாம். அம் மனைவியின் ஆயுளுக்குப் பின் அவருடைய பெண் மக்கள் வார்சாவார்கள். அவர்களும் சாதாரணமாய் ஆயுள் வரை தான் அனுபவிக்க முடியும்.

(2) சட்டப்படிக்கான சுவீகாரம் இல்லாவிட்டால், செல்லமாக வளர்க்கப்பட்ட அம் மகனுக்கு யாதொரு சொத்துரிமையும் கிடையாது. அவன் இறந்த பிறகு அவனுடைய மனைவி மக்களுக்கும் ஒரு பாத்தியமும் கிடையாது.

(3) சொத்தை அடைந்த ஸ்திரீ, சில அவசியமான செலவுகளுக்காக, அச்சொத்தை விற்பனை செய்திருந்தால் அது எப்பொழுதும் செல்லும்.

(4) அவ்வித மில்லாமல் விற்பனை செய்திருந்தால் அதை வாங்கியவர் அவள் ஆயுள் வரை அனுபவிக்கலாம். பிறகு அச்சொத்துக்கள் விற்பனை செய்த ஸ்திரீயின் கணவனுடைய அனந்தர வார்சுகளுக்குப் போய்ச் சேரும்.

35. **கேள்வி:** (சங்கரய்யா நாயுடு-மதுரை) ரயில்வே லயனுக்காக மண் எடுக்கப்பட்ட பள்ளத்தாக்கான ரயில்வே நிலங்களில் தாற்காலிக அனுமதி பெற்று சுமார் 5, 6 வருடங்களாகக் கணிசமான பணங்களும் சரீர பிரயாசையும் செலவும் செய்து பின்னணி வகுப்பைச் சேர்ந்த ஏழை ஒருவர் நஞ்சை விவசாயம் செய்து வருகிறார். புதிய சர்க்கார் அந்நபருக்கு ஷை நிலத்தை நிரந்தர ஜாரி செய்யச் சட்டம் உண்டா?

பதில்: இது சம்பந்தமான சர்க்கார் அறிக்கை ஒன்று கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை:—

ரெயில்வே நிலங்களின் சாகுபடி

குத்தகை கால விஸ்தரிப்பு

ஐந்து வருஷ காலத்துக்கும் அதற்கு மேற்பட்டும் சாகுபடி செய்யப்பட்டு வரும் எல்லா ரெயில்வே நிலங்களும் மூன்று வருஷ காலத்துக்குப் பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட வேண்டுமென்று சர்க்கார் தீர்மானித்துள்ளார்கள். விசேஷ சந்தர்ப்பத்தையொட்டி, சில பழைய குத்தகைக்காரருக்கே, அவர்கள் சாகுபடி செயதுவரும் நிலங்களை, ஏலத்தில் விடாமல் தொடர்ந்து குத்தகைக்கு விட வேண்டும்.

சாதாரணமாய் ஐந்து வருஷ காலத்துக்கும் அதற்கு மேற்பட்டும் சாகுபடி செய்யப்பட்டு வரும் ரெயில்வே நிலங்கள் ஒரு வருஷ கால அடிப்படையின் கீழ், பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டு வந்தன. முதல் ஐந்து வருஷ குத்தகைக்குப் பிறகு இரண்டாம் தரமாக ஒரு வருஷ காலத்துக்குக் குத்தகை விடுவதால், ஷை நிலங்களைக் குத்தகைக்கு எடுப்போர் அந் நிலங்களுக்குப் போதுமான எருவிட்டு மிக்க பலன் அடைவதற்கில்லை. அதனால் அந் நிலங்களை நெடுங்காலத்துக்குக் குத்தகைக்கு விடுவதால் அவற்றைக் குத்தகைக்கு எடுப்போர் கவலையுடன் அந்நிலங்களை நன்ருக எருவிட்டுப் போஷித்து மிக்க பலன் அடைவார்கள் என்று கருதப்படுகிறது.

(சென்னைச் செய்தி - பிப்ரவரி - 1951)

36. **கேள்வி:** (பத்ராசலம்) ஜில்லா பூராவுக்குமாக நியமிக்கப்பட்டிருக்கும் வியாபார வரி ஆபீசர், ஒரு வியாபாரியின் கடை, மண்டி, மில் முதலிய இடங்களுக்கு வந்தால் சோதனை போடலாமா? பெட்டி, பீரோ, இரும்புப் பெட்டி முதலியவைகளைத் திறக்கும்படி நிர்ப்பந்திக்கலாமா? அவருடைய சோதனைக்குக் கேட்பதெல்லாம் காண்பிக்கத்தான் வேண்டுமா? அம்மாதிரி அவர் செய்தும், அவருக்கு அனுகூலமாகா விட்டால் அவர் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா?

பதில்: விற்பனைவரிச் சட்டத்தின் 14-ஆவது செக்ஷன்படிக்கும் அதை அனுசரித்து, சர்க்காரால் 15-9-1939 தேதி கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கும் அறிக்கைப்படிக்கும் எல்லா வியாபார வரி ஆபீசர்களுக்கும் அப்படிச் செய்ய அதிகாரம் உண்டு. சட்டப்படிக்கான சோதனைக்காக அவ்வதிகாரி வருவதையோ, சோதனை செய்வதையோ தடுப்பதும், இடையூறு செய்வதும் 15ஆவது செக்ஷன்படி குற்றமாகும். ரூ. 1000 வரை அபராதம் விதிக்கப்படலாம். சோதனைக்காக அவ்வதிகாரி கேட்கும் கணக்கு வழக்குகளையோ, இடங்களையோ காண்பிக்காமலிருப்பதும் மேலே சொல்லப்பட்ட குற்றமாகலாம். சோதனை செய்ததில் அவ்வதிகாரி ஏதாவது கண்டு பிடித்தாலும் கண்டு பிடிக்கா விட்டாலும், ஒன்றுதான். சட்டப்படிக்கான தம் கடமையை நல்லெண்ணத்துடன் செய்த ஒரு அதிகாரி மீது ஒருவரும் எவ்விதமான சிவில் கிரிமினல் நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளமுடியாது. செக்ஷன் 17 (2). சட்ட வரம்பை மீறி தமக்குச் சட்டத்தால் அளிக்கப்பட்ட அதிகாரத்தை வேண்டுமென்றும், அனாவசியமாகவும், கெட்ட எண்ணத்துடனும் ஓர் அதிகாரி உபயோகித்தால் மட்டில் அவர் செய்கையால் பாதிக்கப்பட்டவர். அவர் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள விற்பனைவரிச் சட்டம் செக்ஷன் 17(1) இடங் கொடுக்கும். ஆனால் அவ்வித நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதற்கு முன்பு ராஜ்ய சர்க்காரின் அனுமதி பெற்றுத்தான் அவ்வதிகாரி மீது நடவடிக்கைத் தொடர முடியும்.

37. கேள்வி: (முத்துசாமி - பல்லடம்) ஒரு (இந்து) தகப்பனுக்கு இரண்டு ஆண் மக்களும் இரண்டு பெண் மக்களும் உண்டு. அவர் வியாஜ்யம் செய்து ஒரு சொத்தை அடைந்தார். அவருக்கு யாதொரு பூர்வீகச் சொத்துமில்லை. இச்சொத்தில் அவருடைய ஆண் பெண் மக்களுக்குப் பாத்தியமுண்டா? இத்தகப்பன் ஒரு மகளுக்குத் தம் சொத்தில் 8ல் 1 பாகம் கொடுப்பதாக வர்த்தமான லெட்டர் எழுதிக் கொடுத்திருந்தால் அது செல்லுமா?

பதில்: பூர்வீகக் குடும்ப ஐவேஜியின் உதவியில்லாமல் ஒரு இந்து எவ்வகையில் சொத்தைச் சம்பாதித்திருந்தாலும் அது அவருக்கு (சுயார்ஜித) தனி உரிமை உள்ள சொத்தாகும். அதில் அவர் உயிருடன் இருக்கும் வரை அவருடைய மக்களுக்கு யாதொரு பாத்தியமும் கிடையாது. அவர் அச்சொத்துக்களைத் தம் இஷ்டப்படி எவருக்கும் கொடுக்கலாம். ஒரு மகளுக்கு 8ல் 1 பங்கு கொடுத்து விடவும் உரிமை உண்டு. ஆனால் 8ல் 1 பங்கை உடனடியாகக் கொடுத்து விடாமல், வருங்காலத்தில் (இனாமாகக்) கொடுப்பதாகக் கண்டு எழுதிக் கொடுக்கும் (ரிஜிஸ்டராகாத) வர்த்தமான லெட்டர் செல்லாது. அதைக் கோர்ட் மூலம் அம் மகள் வற்புறுத்தவும் முடியாது.

38. கேள்வி: (கிருஷ்ணசாமி - கரூர்) ஒரு இந்து குடும்பம். பிரிபடாத அண்ணன் தம்பி இருவரும் இறந்து விட்டார்கள். அவர்களில் மூத்தவருக்கு இரண்டு ஆண்குழந்தைகள். அக்குழந்தைகளுக்காகவும், தனக்காகவும் வேண்டி, தம் புருடன் சுயமாய்ச் சம்பாதித்த சொத்தையோ அல்லது பொதுச் சொத்தையோ மூத்தவர் மனைவி தன் பாகப்படி போக்கியம் வைத்தால் செல்லுமா? கடன் கொடுக்கலாமா?

பதில்: ஆண் குழந்தைகளை சட்டப்படி கட்டுப்படுத்தக் கூடிய அவசியமான விஷயங்களுக்காக அவள் கடன் வாங்கி அதற்காகப் போக்கியம் வைத்தால் அது அவளுடைய பாத்தியத்தையும் ஆண் குழந்தைகளுடைய பாத்தியத்தையும் கட்டுப்படுத்தும். அவசியமில்லாமல் போக்கியம் வைப்பது ஆண் குழந்தைகளின் பாத்தியத்தைக் கட்டுப்படுத்தாது. ஆனால் சொத்தில் அவளுக்குச் சொந்த முறைமையில் உள்ள உரிமைகள் அக்கடனுக்குக் கட்டுப்படும்.

39. கேள்வி: (ராமய்யா-அம்பாசமுத்திரம்) ஒருவரின் சுய சம்பாத்தியத்தைக் கொண்டு ஒரு வீடு வாங்கினார். அவர் இறந்து 20 வருடங்கள் ஆகின்றன. அவருக்கு மக்கள் இல்லை. மனைவி இருக்கிறாள். அம்மனைவிக்கு ஜீவனத்திற்கு

வேறு வழி இல்லாமலிருக்கிறது. அவள் அவ் வீட்டைக் கிரயம் செய்தால் வாங்கலாமா?

பதில்: வாங்கலாம்.

40. **கேள்வி:** (குஞ்சிதபாதம் - சிதம்பரம்) ஒருவர் தம் நிலத்தை 1920-ல் போக்கியம் வைத்தார். போக்கியதார் தம்முடைய போக்கியப் பாத்தியத்தை 1940-ல் வேறு ஒருவருக்கு மேடோவர் செய்து கொடுத்து விட்டார். போக்கியச்சொத்தை மீட்க எவ்வளவு தொகைக் கட்டவேண்டும். 1920 முதல் அசல் தொகையில் 30-ல் 1 குறையுமா? அல்லது 1940 முதல் அசல் தொகையில் 30-ல் 1 பாகம் குறையுமா?

பதில்: அசல் தொகையில் சட்டப்படி யாதொரு குறைவும் ஏற்படாது. சொத்தை மீட்க ஜாடா அசல் தொகையையும் கொடுக்க வேண்டும். ஆனால் மேடோவர் பெற்றவர், அசல் தொகைக்குக் குறைவாகக் கொடுத்து மேடோவர் வாங்கி இருந்தால் அவர் கொடுத்தத் தொகை எவ்வளவோ அதை மட்டில் கொடுத்து, சொத்தை மீட்கலாம்.

41. **கேள்வி:** (நூர்முகம்மது - அதிராம் பட்டினம்) ஒரு இந்து, மைனராக இருக்கும் போது, யாதொரு கார்டியனுமில்லாமல், தம் முன்னோர்களால் சம்பாதித்த சொத்துக்களை ஈனக்கிரயமாக விற்றும், பெந்தகம் ஒத்தி முதலானவை செய்தும் இருந்தால் — அம் மைனர் மேஜரானதும் அச்சொத்துக்களைத் திருப்ப சட்டம் உண்டா?

பதில்: மைனரால் எழுதிக் கொடுக்கப்படும் கிரயம் பெந்தகம் ஒத்தி ஒன்றும் செல்லாது. சொத்துக்களை அவர் திருப்பி அடைந்து விடலாம்.

42. **கேள்வி:** (சுப்பிரமணியம் - உடுமலைப் பேட்டை) காப்பி ஹோட்டல்களில் டீ கடைச் சிப்பந்திகள், முதலாளிகள் இவர்கள் உணவு, டிபன் வகையரா சாப்பிடுவதை விற்பனை ஆனதாகக் கருதி விற்பனை வரி விதிக்கலாமா? இதற்கு என்ன சட்டம்?

பதில்: விற்பனை வரிச்சட்டத்தில் செக்ஷன் 2 (4) ல் "விற்பனை" என்றால் என்ன என்று விளக்கப்பட்டிருக்கிறது. அதன்படி ஒரு சரக்கின் பாத்தியம், ஒருவரிடமிருந்து, வியாபாரத்தில், வேறு ஒருவருக்கு மாற்றப்பட்டால் அது "விற்பனை" ஆகும். ரொக்கமாக விலை வாங்கிக்கொண்டு தான் விற்கவேண்டுமென் பதில்லை. கடன் கட்டாகவோ, வேறு ஒரு பிரதிப் பிரயோஜனத்திற்காகவோ அச் சரக்கைக் கொடுப்பதும் "விற்பனை" தான். ஆகையால் முதலாளி தாமே சாப்பிடுவதில் டிபன் முதலிய தின்பண்டங்களின் பாத்தியம் வேறு ஒருவருக்கும் மாற்றப்படவில்லை. இது விற்பனை ஆகாது. ஆனால் சிப்பந்திகள் சாப்பிடுவது அப்படி அல்ல. அவர்களுக்கு இனமாக டிபன் உணவு வகையராக் கொடுக்கப் பட்டாலொழிய, அச்சிப்பந்திகள் செய்யும் வேலைக்காகவே, அவர்களுக்கு ரொக்கச் சம்பளத்துடன் டிபன் வகையராவும் கொடுப்பதாகும். பிரதிப் பிரயோஜனம் இருக்கிறது. ஆகையால் இதுவும் "விற்பனை" என்பதில் அடங்கும்.

"வக்கீல்" பிரசுரங்கள்—2.

ஷாப் சட்டம்

விலை ரூ 1—8—0. (தபால் சார்ஜ் பிரத்தியேகம்.)

ஷாப் சட்ட செக்ஷன்கள், ரூல்கள், நமூனுக்கள், விதிவிலக்குகள் எல்லாம் விஷய வாரியாக தொகுக்கப்பட்டு மிக எளிய தமிழ் நடையில் விளக்கி எழுதப்பட்டுள்ளது.

குறிப்பு:—"வக்கீல்" விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேர்ந்திருப்பவர்களுக்கு 15—3—1951க்குள் தபால் மூலம் அனுப்பப்படும். இப்புத்தகம் கிடைக்குமிடம்:—

"வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, :: கும்பகோணம்.

கோட்டைக் குப்பம் கொலை வழக்கு

[ஆதாரம்:—சென்னை—சர்க்காரின் மதராஸ் இன்பர்மேஷன்]

சமீபத்தில் பொதுமக்களின் மனதில் ஓர் திகிலை உண்டாக்கிய சில சம்பவங்களில் "கோட்டைக்குப்பம் கொலை வழக்கு"ம் ஒன்றாகும். இவ்வழக்கில் வெளியான உண்மைச் செய்கைகள் கற்பனை கதைகளைவிட விசித்திரமாகவே இருந்தன. பல கொலைகள் செய்யப்பட்டன. ஆனால் கொலை செய்ததை ஒருவரும் நேரில் பார்த்ததாக யாதொரு சாட்சியும் இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை. இருந்தாலும் இவ்வழக்கில் ருசுவான சந்தர்ப்பங்கள் எல்லாம் சேர்ந்து கொலையாளி யார் என்பதை ஐயமறச் சுட்டிக் காட்டின. ருசுச்சட்டத்தில் **(Evidence Act)** அனுமான ருசு **(Circumstantial Evidence)** என்றால் என்ன என்பதற்கும் இவ்வழக்கு ஓர் தக்க உதாரணமாகும்.

கொலை வழக்குகளைப் பற்றித் தினசரிப் பத்திரிகைகளில் அடிக்கடி படித்துத் தான் வருகிறோம். கடும் கோபத்தால் ஏற்படும் கொலைகள் சில. கடும் வறுமையினால் வாடும் கைகளும் கொலைபுரிவதை அறிவோம். ஆனால் மற்றத் தொழில்களைப்போல் கொலை செய்வதையே ஓர் தொழிலாக வைத்துக் கொண்டு, அதனால் பணம் சம்பாதித்துத் தம் அன்றாட ஜீவனத்தை நடத்திய மௌலானா என்ற முகமது சையது தமிழ் நாட்டையே கதி கலக்கிவிட்டார். விஞ்ஞானத்தில் மேன்மை அடைந்திருக்கும் அமெரிக்காவிலும் மேல் நாடுகளிலும் நடக்கும் கொலைகளுக்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல மௌலானா செய்த கொலைகள்.

கோட்டைக்குப்பம் என்பது தென் ஆற்காடு ஜில்லாவில் உள்ள ஓர் சிறிய கிராமம். புதுச்சேரிக்குச் சமீபம். இங்கேதான் மௌலானா என்ற முகமது சையத் ஓர் வைத்தியசாலை நடத்திவந்தார். இவர் மலையாளத்தைச் சேர்ந்தவர். வயிற்று நோய்களுக்கு மருந்து கொடுத்து வந்தார். குழந்தைகள் இல்லாத ஸ்திரீகளுக்கு மலட்டைப் போக்கவும் சிகிச்சை செய்யத்தெரியுமென்று விளம்பரப் படுத்தியிருந்தார். ஒன்றும் முடியாவிட்டால் மாந்திரீகத்தால் வியாதிகளை அகற்றுவதற்கும் தம்மால் முடியுமென்று சொல்லிவந்தார். இவருடைய வைத்தியசாலைக்குப் பல இடங்களிலிருந்து நோயாளிகள் வர ஆரம்பித்தனர். புதுச்சேரியிலிருந்தும் பலர் இவரிடம் வந்தனர். புதுச்சேரியிலிருந்த ஒரு ஹோமியோபதி வைத்தியரும், அதே கிராமத்திலிருந்த ஓர் நாட்டு வைத்தியரும் இவருக்கு உதவி புரிந்து வந்தனர்.

1947 எப்ரல் 10 ஆம் தேதி மௌலானாவிடம் வைத்தியம் செய்துகொள்ள அவருடைய வைத்திய சாலைக்குச் சென்ற மங்கம்மாளை அன்று முதல் காணோம். சுமார் 1200 ரூபாய்க்கு நகைகள் அணிந்திருந்தாள். காணாமற் போனவளை அவளுடைய கணவனும் உறவினர்களும் எங்கும் தேடினர். அகப்படவில்லை. ஏனோ இவர்கள் இதைப் போலீசாரிடம் தெரிவிக்க வில்லை!

1948 எப்ரல் 29ஆம் தேதி மௌலானாவிடம் வைத்தியம் செய்து கொள்ளப்போன சிந்தாமணி அம்மாளும் எங்கோ மறைந்து போனாள். இவளும் ரூ. 800-க்கு நகைகள் அணிந்திருந்தாள்.

1948 மே 29ல் மௌலானாவின் வைத்திய சாலைக்குச் சென்ற செல்வநாயகி அம்மாளையும் காணோம். ஜூன் 22ஆம் தேதி அங்கே சென்ற விசாலாட்சியையும் காணோம். இவர்களும் நகைகள் அணிந்திருந்தனர். மறைந்து போன ஸ்திரீகளின் கணவர்களும் உறவினர்களும் எங்கும் தேடினர். மௌலானாவையும் விசாரித்தனர். மௌலானா ஒவ்வொருவருக்கும் தந்திரமாகப் பதில் சொல்லிச் சமாளித்தார். தம்மிடம் அவரவர் வைத்தியம் செய்துகொண்டவுடன் தம்முடைய வைத்தியசாலையை விட்டு வெளியே போய்விட்டதாயும் அவர்கள் எங்கே போனார்கள் என்று தமக்குத் தெரியாதென்றும் சொல்லிவந்தார். மௌலானாவைப் பற்றி ஏதோ குருட்டுச் சந்தேகம் இருந்ததே ஒழிய ஒருவருக்கும் என்ன நடந்ததென்று தெரிய வழியில்லை.

விசாலாட்சி அம்மாளின் கணவன் மட்டில் இதைப்பற்றி, தென் ஆர்க்காடு ஜில்லா தலைமைப் போலீஸ் அதிகாரிக்கு ஒரு மனுச் செய்து கொண்டார். போலீஸ் விசாரணை ஆரம்பமாயிற்று. காணாமற்போன நான்கு ஸ்திரீகளும் மௌலானாவின் வைத்தியசாலைக்குப் போன பிறகு மறைந்து போய் விட்டதால் மௌலானாவின் மீது சந்தேகம் கொண்டு போலீசார் அவரை முதலில் அரஸ்டுசெய்தனர். மௌலானாவோ தமக்கு ஒன்றும் தெரியாதென்றே சாதித்து வந்தார். அவர் என்ன குற்றம் செய்தாரென்றே யாதொரு ருசுவும் ஏற்படாத நிலைமையில் மௌலானா ஜெயிலிலிருந்து விடுதலையும் செய்யப்பட்டார்.

சுற்று வட்டாரங்களில் மௌலானாவைப் பற்றிய வதந்திகள் பல பரவி வந்ததால் ஜில்லா போலீஸ் தலைமை அதிகாரி தாமே நேரில் புலன் விசாரணையை எடுத்துக் கொண்டார். இவர் மிக் யுக்தியான ஓர் காரியம் செய்தார். அதாவது மௌலானாவின் வீடு, வைத்தியசாலை இவைகளை நன்றாகச் சோதனை போடுவதுடன், வைத்திய சாலையின் கொல்லைப் புறத்தை நன்றாக வெட்டிப் பார்க்கும்படி உத்திரவிட்டார்.

மௌலானாவின் வைத்தியசாலையின் கொல்லைப் புறமும் மிகச் சிறியதே. முக்கோண வடிவமுள்ளது. ஒரு பக்கம் 8½ அடி அகலமும், கோடியில் 1½ அடி அகலமும் தான் இருந்தது. மேலே செடி கொடிகள் பச்சென்று பயிர் செய்யப் பட்டிருந்தன. சந்தேகத்திற்கு ஒன்றும் இடமில்லை.

இருந்தாலும் இந்தக் கொல்லையில் உள்ள மண்ணைத் தோண்டிய போலீசார் திடுக்கிட்டனர். நான்கு பிரேதங்கள் அகப்பட்டன. தோலும் சதையும் அநேகமாய் மக்கி விட்டன. எலும்புக் கூடுகள் அப்படியே இருந்தன. எல்லாம் உட்கார்ந்திருந்த நிலையில் இருந்தன. யார் யாருடைய உடல்கள் என்று அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. அத்துடன் இருந்திருந்தால் மௌலானா தப்பி விட வழியிருக்கலாம். ஏனென்றால் யாருடைய உடல்கள் அவருடைய கொல்லையில் புதைக்கப்பட்டிருக்கிறதென்றே சொல்ல முடியாவிட்டால் அவர் மீது என்ன குற்றம் ருசுவாகும்? ஆனால் இவ்வழக்கைப் புலன் விசாரித்த போலீசாரின் புத்திசாலித்தனமும் விடாமுயற்சியும் மெச்சத் தகுந்தவையே. இது சம்பந்தமான பல சந்தர்ப்பங்களை ருசுப்பித்தனர். இச்சந்தர்ப்பங்களே கொலையாளியைக் கண்டு பிடித்தன. இச்சந்தர்ப்பங்கள் என்ன என்று பார்ப்போம்:—
(1) நான்கு குழிகளிலும் அகப்பட்ட எலும்புகளை ரசாயன நிபுணர் பரிசோதனை செய்ததில் இவைகள் ஒவ்வொன்றும் ஒரு ஸ்திரீயின் எலும்புகள் என்று தெரியவந்தன. (2) ஒரு குழியில் இருந்த பிரேதத்தின் முன் கை மட்டில் அதிகமாக மக்காமல் இருந்தது. இதில் பச்சை குத்திக் கொண்ட குறிகள் காணப்பட்டன. இக்கைகளைப் பார்த்த செல்வநாயகி அம்மாளின் கணவனும் உறவினர்களும் அடையாளம் கண்டு பிடித்து அது செல்வநாயகி அம்மாளின் உடல் என்பதை ருசுப்பித்தனர். (3) அதே குழியில் ஒரு உட்பாவாடையும், ரவிக்கையும், தாவணியும் இருந்தன. இவைகளில் சலவைத்தொழிலாளர் போடும் குறிகள் தெரிந்தன. செல்வநாயகி அம்மாளின் வீட்டிலிருக்கும் மற்ற உடைகளில் உள்ள குறியும் இக்குழியில் அகப்பட்ட உடைகளில் உள்ள குறியும் ஒன்றாக இருந்தன. இத்துணிகளை வழக்கமாகச் சலவை செய்பவரும் இதை ருசுப்பித்தார். (4) செல்வநாயகி அம்மாளை மௌலானாவின் வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்ற ரிக்ஷாக்காரரைப் போலீசார் கண்டு பிடித்து விசாரித்ததில் அவள் அன்று ஒரு நீல நிறப் புடவை அணிந்திருந்ததாகவும் நகைகள் போட்டிருந்ததாகவும் புலப்பட்டது. செல்வநாயகி ஒரு நீல நிறப்புடவை அதற்கு முன்பு தான் வாங்கினாள். ஆனால் அதிலிருந்து ஓரத்தில் கொஞ்சம் கிழித்து ஒரே நிறமாக இருக்க வேண்டுமென்று அதில் ஒரு ரவிக்கை தைத்துக் கொண்டாள். மௌலானாவின் வைத்தியசாலைக்குப் போகும்போது அவள் அந்த ரவிக்கையை அன்று அணிந்து போகவில்லை. ரவிக்கை அவள் வீட்டிலேயே இருந்தது.

மௌலானாவின் வீட்டைச் சோதனை போட்டதில் ஒரு நீல நிறப்புடவை அகப்பட்டது. அதுவும் செல்வநாயகியின் வீட்டிலிருந்த ரவிக்கையும் ஒரே துணிதான் என்பது வெளியாயிற்று. (5) செல்வநாயகி அம்மாள் அணிந்திருந்த ஓர் மோதிரம் மௌலானாவின் சாமான்களைச் சோதனை போட்ட பொழுது அகப்பட்டது. (6) அன்றாட காலட்சேபத்திற்கே தவித்துக் கொண்டிருந்த மௌலானாவிடம் 1948 மே ஜூன் மாதங்களில் திடீரென்று பல விலை உயர்ந்த நகைகள் புழங்கி வந்தனவென்றும், இவைகளில் சிலவற்றை அவரும் சிலவற்றை அவருடைய மகனும் விற்பனை செய்தது ருசுவாயிற்று. (7) மௌலானாவிடம் இருந்த புத்தகங்களில் காணமற் போன பெண்மணிகளின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

எல்லாம் சரி; வைத்தியம் செய்வதாக வேஷம் போட்டு வந்த மௌலானாவே இப்பெண்களைக் கொலை செய்ததாக எப்படி ஊகிக்க முடியும்; பட்டப்பகலில் ஒருவர் கொலை செய்யும் பொழுது கூச்சலோ, சத்தமோ ஏற்படாதா? அக்கம் பக்கத்தில் உடனே கசமுசல் உண்டாகாதா? பின் எப்படி அய்யா மௌலானா நான்கு ஸ்திரீகளையும் கொலை செய்திருக்க முடியும்? இது எப்படி செய்யப்பட்டதென்பதையும் வேறு சந்தர்ப்பங்கள் எடுத்துக் காட்டின.

மௌலானாவின் வைத்தியசாலையில், இன்ஜெக்ஷன் செய்யும் சில ஊசிகளும், ஊசி மருந்துப் பெட்டிகள் சிலவும் கைப்பற்றப்பட்டன. இந்த ஊசி மருந்துகள் சாதாரண மருந்துகள் அல்ல. 'மார்பைன் குளோரைட்' (Morphine Chloride) என்ற மயக்கத்தை உண்டாக்கும் மருந்து. மௌலானாவின் வைத்திய முறை இதுதான். தம்மிடம் சிகிச்சை செய்து கொள்ளவரும் ஸ்திரீக்கு அவளுடைய வியாதியை உடனே போக்க ஊசி மருந்து போட வேண்டுமென்று சொல்வார். அவள் சம்மதிப்பாள். உடனே மயக்க மருந்தை ஊசி மூலம் இன்ஜெக்ஷன் செய்வார். நோயாளிக்கு மயக்கம் வந்து விடும். உடனே 'குளோரோ பாம்' என்ற மயக்கப் புகையை அவளுடைய மூக்கு மூலம் விரைவாகச் செலுத்துவார். ஒரு விநாடியில் உயிர் போய் விடும். உடனே பிணத்தைக் கொல்லைக்குக் கொண்டு போவார். நகைகளையும் முக்கியமான உடைகளையும் கழற்றிக் கொண்டு பிரேதத்தைக் குழியில் போட்டு மண்ணை மூடுவார். கொல்லை சிறியதாக இருந்ததால் இது விஷயத்தில் மௌலானா மிகச் சிக்கனமான ஒரு முறையைக் கையாண்டார். குழிகளை நீளமாக வெட்டினால் மற்றப் பிரேதங்களுக்கு இடம் போதாது. ஆகையால் குழிகளைச் செங்குத்தாகவே வெட்டி, சவங்களை உட்கார்ந்த நிலையிலேயே அடக்கம் செய்து வந்து இட நெருக்கடியையும் ஒருவாறு மௌலானா சமாளித்து வந்தார்.

மௌலானா மீதும் அவருடன் அவருடைய மகனும், வேறு இருவர்களும் உதவியாக இருந்ததாக அவர்கள் மீதும் போலீசார் கொலை வழக்குத் தொடர்ந்தனர். மேலே விவரிக்கப்பட்ட சம்பவங்கள் ருசுப்பிக்கப்பட்டன. மௌலானாவைத் தவிர மற்ற மூவர்கள் மீது சந்தேகமிருந்தாலும் அவர்கள் எடுத்துக் கொண்ட பங்கு என்ன என்று நிச்சயமாக ருசுப்பிக்க முடியவில்லை. ஆனால் ருசுவான சந்தர்ப்பங்கள் எல்லாம் சேர்ந்து மௌலானாதான் இக்கொலைகளைப் புரிந்தார் என்பதை உறுதி செய்தன. மௌலானா கொலை செய்ததை ஒருவரும் நேரில் பார்க்கவில்லை. இருந்தாலும் இவ்வழக்கில் ருசுவான சந்தர்ப்பங்கள் கொலையாளி யார் என்பதைச் சந்தேகங்களுக்கு இடமில்லாமல் சுட்டிக் காட்டின. மௌலானா தூக்குத் தண்டனை அடைந்தார். பாமர மக்களை ஏமாற்றிய பாவி! நம்பிக்கை ஊட்டி உயிரை வாங்கிய ஓர் பாதகன்! கொலை செய்வதையே ஓர் தொழிலாகக் கொண்ட ஓர் கொடியன்!

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUBUVANAM, TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. *Editor:*—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

FILM PRODUCERS, PLEASE NOTE !!!
THE STORIES YOU SEEK ARE NOW READY!

- *Soul - stirring Historical TALES of Tamil Nad!*
- *Stories of love, courage, pathos, sacrifice - amazing and teeming with incidents!*
- *Stories that stir the hearts of the people of our Mother - Land.*
- *Stories that speak our glory!*

1. **MARUDHIYIN KADHAL** - மருதியின் காதல் *The* **COPY RIGHTS** *of this story have been obtained by the* "**PAKSHIRAJA STUDIOS**," *Coimbatore.*

Other Stories:—

2. PONMALAI - பொன்மாலை
3. KANCHANA - காஞ்சனா
4. BHUSUNDARI - பூஸுந்தரி
5. NAGANATTU ELAVARASI - நாகநாட்டு இளவரசி
6. ADHIGAMAN KATHAL - அதிகமான் காதல்
7. KUNDALAKESI - குண்டலகேசி

I am the sole author of the above stories.

Reproduction of these either in original or in any other form without my permission is strictly prohibited. All rights belong to me, the Author undersigned.

Apply to:—

V. VENUGOPALAN,
LITERARY AND HISTORICAL WRITER,
Tiruvidaimarudur, Tanjore DT.

ரூபாய் 100 இனும்
நரையை ஒழியுங்கள்

சாயம் மூலம் இல்லை. எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கறுப்பாகச் செய்து மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலிய வற்றைப்போக்க தலைவலியைக் குணப்படுத்தும். பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2-8-0. 3 at a time Rs. 6-8-0 அதற்கு மேற்படாதது ரூ. 3-8-0 3 at a time Rs. 9. எல்லா நரைக்கும் ரூ. 5. 3 at a time Rs. 12.

VIJOY LABORATORIES (V. M.)
P.O. MANOHARPUR (SINGHBHUM)

ஆஸ்வசீன் ஸ்பெஷல்

நீடித்த கனமான இரைப்புக்கு சிறந்த மருந்து

½ அவுன்ஸ் விலை 10 ரூபாய்

கிடைக்குமிடம்:—

வசீன் ப்ராடக்ட்ஸ்
34, சின்னகடைத்தெரு,
தெப்பக்குளம்,
திருச்சினுப்பள்ளி.

FOR BEST PORTRAITS AND ENLARGEMENTS
Visit:-
A. NALLAPILLAI & SONS,
PHOTO GOODS DEALERS,
KUMBAKONAM.

"வக்கீல்"
(விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப்பக்கம் (இரண்டு கலர்)	ரூ. 100
உள் அட்டை முழுப்பக்கம்	ரூ. 80
உள் பக்கம் முழுப்பக்கம்	ரூ. 60
ஷை ... அரைப் பக்கம்	ரூ. 35
ஷை ... கால் பக்கம்	ரூ. 20
ஒரு காலம் - அங்குலம்	ரூ. 5

(தொடர்ச்சியாய் 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

"வக்கீல்" பிரசுரங்கள்

பிரசுரமானவை:—

1. தொழிற்சாலைச் சட்டமும் — விதிகளும் நமூனு 20-ன்படி சுருக்கம் ... ரூ. 0—8—0
2. ஷாப் சட்டம் ... ... ரூ. 1—8—0

அச்சிலிருப்பவை:—

3. விற்பனை வரி ... ... ரூ. 2—0—0
4. விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் (புதிய ஒத்தி திருத்தம் உள்பட) ... ... ரூ. 0—12—0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

மற்ற முக்கிய பிரசுரங்களை எதிர்பார்க்கவும்!

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)

Regd. No. M. 6399

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

GISTRAR O
MAR .951
MADRAS

REGISTERED TRADE MARK

பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத்தைலம்,
கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS:

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris
B. BALAPATTABI CHETTIAR,
246, VYSYAL STREET, COIMBATORE.